பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 13 சனிக்கிழமை (27.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 213

# தமிழர் பிரதேசங்களில் இயல்புநிலை ஏற்பட இராணுவத்தை முகாம்களுக்கு அனுப்பவும்

## இலங்கைத் தூதுக்குழுவிடம் இந்தியா வற்புறுத்து

புதுடில்லி, ஜூன்27

இலங்கையில், தமிழர் பிரதேசங்களில் இயல்பு நிலை ஏற்படுவதற்கு, இராணுவத்தினரை முகாம்களுக்கு திருப்பி அனுப்பவேண்டும்.

இவ்வாறு இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது இந்திய மத்திய அரசு.

தமிழர் பிரதேசங்களில் இயல்புநிலை திரும்பாமல் இருப்பதற்கு, அப்பகுதியில் இராணுவத்தினரின் அளவுக்கு அதிகமான நடமாட்டமே காரணம் என்று இலங்கைத் தூதுக்குழுவிடம் சுட்டிக்காட்டப்பட்டது. அதனால் இராணுவத்தினரை முகாம்களுக்கு திரும்பிச்செல்ல உத்தரவிட வேண்டும் என்று இந்திய அதிகாரிகளின் மூவர் உயர்மட்டக் குழு, இலங்கை மூவர் உயர்மட்டக் குழுவினரிடம் வலியுறுத்தி உள்ளதாக இந்தியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இருந்து, ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் பஸில் ராஜ பக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்த பாய ராஜ பக்ஷ, ஜனாதிபதியின் செய லாளர் லலித் வீரதுங்க ஆகியோரைக் கொண்ட மூவர் உயர்மட்டக் குழு கடந்த புதன்கிழமை புதுடில்லிக்கு இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

அந்தக் குழுவினர் வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர்மேனன், பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், இராணுவச் செயலாளர் விஜேசிங் ஆகி யோரைக் கொண்ட இந்திய உயர்மட்டக் குழுவைச் சந்தித்துப் பேசியது.

அந்தச் சந்திப்பின் போது பின்வரும் விடயங்களையும் இந்திய உயர் அதிகாரிகள் குழு இலங்கைத் தூதுக் குழுவிடம் வலியுறுத் தியுதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முகாம்களில் தமிழர்கள் போதிய உணவு, சுகாதார வசதியின்றி அடைத்து வைக்கப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியை மீட்ட தளபதி பிரதித் தூதராகிறார்

கொழும்பு, ஜூன் 27

வன்னியில், கிளிநொச்சியை மீட்கும் இராணுவ நடிவடிக்கையில் ஈடுபட்டிருந்த 57 ஆவது படையணியின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் ஜேர்மனியின் பிரதித் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தபாய இன்று அமெ. செல்கிறார்

கொழும்பு, ஜூன்27

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இன்று அமெரிக்கா செல்கிறார் என ஏசியன் ரிபியூன் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது கலிபோர்ணியா நேவாடா மாநில இலங்கையரைச் சந்தித்துக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 'வணங்காமண்' இலங்கைக்கு வராது; உதவிப்பொருள்களே இங்கு வந்து சேரும்

### ஜனாதிபதியின் செயலர் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 27

இப்போது சென்னையில் தரித்து நிற்கும் 'கப்டன் அலி' (வணங்காமண்) கப்பலில் இருந்து உதவிப் பொருள்கள் அங்கு தரை இறக்கப்படும். பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்படும்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

'கப்டன் அலி' கப்பலை மீண்டும் இலங்கை கடற்பரப்புக்குள் அனுமதிக்கும் உத்தேசம் இல்லை. செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாகவே (16 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி மக்கள் ஏற்கும் அரசியல் தீர்வை முன்வைத்தால் ஐ.தே.க. ஆதரிக்கும்

### லக்ஷ்மன் செனவிரட்ன சொல்கிறார்



கொழும்பு, ஜூன் 27

வடபகுதி மக்கள் ஏற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வு ஒன்றை அரசாங்கம் கொண்டு வருமாயின் ஐக்கிய தேசியக்கட்சி அதனை ஆதரிக்கும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறிய தாவது:-

வடபகுதி மக்கள் ஏற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வு கொண்டு வரப்படுமாயின் தமது கட்சி அதனை கட்டாயம் ஆதரிக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை நிலை தடுமாறச் செய்யும் தேவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லை.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## 'பொப்' இசை சக்கரவர்த்தி மைக்கல் ஜக்ஸன் மரணம்!



கொழும்பு, ஜூன் 27

குழந்தை நட்சத்திரமாக மிளிர்ந்து பின்னர் பொப் இசை உலகின் சர்க்கரவர்த்தியாக மாறிய மைக்கல் ஜக்சன் வியாழக்கிழமை லொஸ் ஏஞ்சல்ஸ் வைத்தியசாலையொன்றில் தனது 50 ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார்.

லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள அவரது வாடகை வீட்டில் நேற்றுக்காலைமயக்க முற்ற நிலையில் ஜக்சன் காணப்பட்டதை தொடர்ந்து மருத்துவ உதவியாளர்கள் அங்கு அழைக்கப்பட்டனர். (15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களின் சுதந்திரத்தைப் பறித்தால் நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கையற்ற புதிய குழு உருவாகும்!

### சபையில் ரணில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் எம்.பிக்களாகச் சுதந்திரமாகச் செயற்படும் உரிமை வழங்கப்பட வேண்டும். இல்லையேல் தமிழ் மக்கள் இந்த நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கை இழந்து விடுவர். நாடாளுமன்றம் மீது நம்பிக்கையற்ற இன்னொரு புதிய குழு உருவாகிவிடும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மறைந்த எம்.பி. பத்மநாதனுக்கான (16 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலுக்குப் பிறகாவது தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைய அழைக்கிறார் அரியநேத்திரன்

கொழும்பு, ஜூன் 27

தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக யாழ்., வவுனியா தேர்தலுக்குப் பிறகாவது தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின்கீழ் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்று கூட்டமைப்பு எம்.பி. ப.அரியநேத்திரன் நேற்று

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நாணய நிதியக் கடனுதவி; பிரிட்டனின் முடிவில் மாற்றமில்லை

நியூயோர்க், ஜூன்27

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் தற்போதைய சூழ்நிலையில் கடனு தவி வழங்கக்கூடாது என்ற பிரிட்டனின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவில்லை என அந்த நாட்டின் வெளிவிவகார அலுவலக அமைச்சர் மார்க் மலோச் பிரவுண் தெரிவித்துள்ளார்.

'இன்னர்சிற்றி பிரஸ்' செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் இதனைக்

(16 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகத்தை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம் (செய்தி 5 ஆம் பக்கத்தில்)

# பத்திரிகைகள் எரிக்கப்பட்ட சம்பவம்; தேர்தல் வன்முறையாக பதியப்பட்டது

## அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் எரிக்கப்பட்ட சம்பவத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்.அரசாங்க அதிபர் கே. கணேஷ் நேற்றுமுன்தினம் (வியாழக் கிழமை) யாழ்.செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போதுதெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மூன்று பத்திரிகைகள் எரிக்கப்பட்ட சம்பவம் ஒரு தேர்தல் வன்முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என பத்திரிகையாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போதே அரச அதிபர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ்.அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் எரிக்கப்பட்ட சம்பவம் குறித்து அறிந்து கொண்டேன். இது தொடர்பாக உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கதைத்துள்ளேன். இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என உயர் அதிகாரிகளைக் கேட்டுள்ளேன்.

குடாநாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். அதேநேரம் பத்திரிகைகளும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்-என அவர் மேலும் தெரிவித்தார். (1-236)

# பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாக்க ஜனநாயக சக்திகள் ஒன்றுபட வேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா) அணி செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

இயல்புநிலையை தோற்றுவிக்கவும் ஜனநாயக சூழல் மேம்படவும் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றுபட்டு குரல் கொடுப்பது அவசியம்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா) அணி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

குடாநாட்டுப் பத்திரிகைகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் குறித்து அந்த அமைப்பின் செயலாளர் தி.சிறீதரன் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பத்திரிகைகள் எரிக்கப்பட்ட சம்பவத்தை பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் வன்மையாகக் கண்டிக்கின்றது. இத்தகைய சம்பவங்கள் வன்முறைக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நம்பிக்கைகளை சிதறடிக்கச் செய்யும்.

கருத்துக்களில் எப்போதும் ஜனநாயகம் நிலவ வேண்டும். பன்முகத்தன்மை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். பொதுவாக உருவாகிவரும் ஜனநாயக சூழல் பாதுகாக்கப்பட வேண்டும்.வேறுபட்ட சமூக சாதகமான அபிப்பிராயங்களுக்கு இடமளிக்கப்படல் வேண்டும். நூறு கருத்துக்கள் மலர்வதும் முட்டிமோதுவதுமே சமூகத்தில் ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கும். கருத்துச் சுதந்திரத்துக்கு அடி நாதமாக இருப்பது பத்திரிகைச் சுதந்திரம் அது பாதுகாக்கப்பட வேண்டும். இல்லையேல் மக்கள் மௌனமாகிவிடுவார்கள். மக்கள் மனங்களில் இருந்து பீதி நிலையை நீக்க வேண்டும் அதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

கருத்துக்களிலும் வன்முறை களையப்பட வேண்டும். எமது சமூகத்தில் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய கருத்து வன்முறையே பல அழிவுகளுக்கு இட்டுச் சென்றது என்பதனை மனதில் இருத்தி ஆகவேண்டும். கண்ணியமானதொரு கருத்துச் சுதந்திரப் பண்பாடு எமது சமூகத்தில் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

அதற்கான சூழ்நிலை உருவாகிவரும் வேளையில் நம்பிக்கைகளை தளர்வடையச் செய்யும் செயல்கள் நிறுத்தப்பட வேண்டும். இயல்பு நிலையைத் தோற்றுவிக்கவும், ஜனநாயக சூழல் மேம்படவும், பத்திரிக்கைச் சுதந் திரத்தை பாதுகாக்கவும் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்று பட்டு குரல் கொடுப்பது அவசியம் - என்றுள்ளது.

## தமிழ்மொழிமூல உற்பத்தித்திறன் செயலக வளவாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்குஉற்பத்தித்திறன் தொடர்பான அறிவை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்மொழிமூல வளவாளர் குழாம் (Resource persons pool) ஒன்றை உருவாக்க எண்ணியுள்ளது. இதற்காக உற்பத்தித்திறன் வளவாளரை பயிற்றுவிப்பதற்காக செயலாற்றுகைத்திறன்(PRESENTATION SKILLS) உள்ள அரச தனியார்துறையைச் சார்ந்த பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

இளைப்பாறிய அரச சேவை உத்தியோகத்தர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். பட்டப்படிப்பு அல்லது அதற்கு சமமான கல்வித் தராதரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விவரங்கள் அடங்கிய விண் ணப்பத்தைத் தயாரித்து உடனடியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக மனித வள அபிவிருத்தி உதவியாளரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் இரு நாள் பயிற்சி வகுப்பு நடைபெறும் என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்.

பிரதேச செயலர்.

## யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூ.ச.

### அமைச்சருடனான சந்திப்பில் மாற்றம்

இன்று (27.06.2009) சனிக்கிழமை நடைபெறவிருந்த அமைச்சருடனான சந்திப்பு நாளை (28.06.2009) ஞாயிற்றுக் கிழமைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து உரிமையாளர்களும் நாளை (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சங்கப் பணிமனைக்கு தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

யா.மா.த.பா.உ.கூ.சங்கம்,
கோண்டாவில்.

நிர்வாகம்

# வார இறுதி நிகழ்வுகள்

வடமராட்சி, ஜூன் 27

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் யாழ்ப்பாணம், பருத்தித்துறை-கட்டைவேலி சேகரங்கங்கள், புத்தூர் அருட்பணித் தளம் என்பன இணைந்து நடத்தும் மெதடிஸ்த தின விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல்பிற்பகல் 3.30 மணிவரை புத்தூர் அருட்பணித்தளத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். குடாநாட்டில் உள்ள மெதடிஸ்தர்களின் ஒன்று கூடலாக இடம்பெறும் இந்த நிகழ்வில் பாடல்கள், விளையாட்டுக்கள், திருமறை, அறிவுப்புதிர் போன்றவை இடம் பெறும். (1-236)

* * *

வடமராட்சி, ஜூன் 27

யாழ். மாவட்ட சிறுவர்களுக்கிடையேயான போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. பருத்தித்துறை-கட்டவேலி சேகர முகாமைக் குரு அருட் திரு என். அருள்நாதன் தலைமையில் நடைபெறும் இப் போட்டிக்கு வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வி.செல்வராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (1-236)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 27

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து மாணிக்க வாசக சுவாமிக்கு குரு பூசை வழிபாடு, திருவாசகப் பாராயணம் நடைபெறும்.

காலை 9.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் தேவஸ்தானத்தில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து மாணிக்கவாசக சுவாமிகள் குரு பூசை, திருவாசகப் பாராயணம் நடைபெறும். (1)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரை யாடல் நாளை மறு தினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய, தோற்றாத தொண்டர் ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதால் சகல தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 27

க.பொ.த(உயர்தரம்)பௌதிகவியல் புதிய பாடத்திட்டத்திற்கான தொண்டைமானாறு வெளிக்கள நிலைய ஏற்பாட்டிலான செயலமர்வு இன்று சனிக்கிழமை முற்பகல் இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர் க.கந்தசாமி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார். (6)

* * *

தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமித்தியினால் நடத்தப்படும் யோகாசன தியான வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. பிரதி சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணி வரை நடைபெறும் இவ் வகுப்புக்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவரும் கலந்து கொள்ளலாம். பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 27

குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு வித்தியாலய அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன ஓய்வு பெற்ற பணிப்பாளர் இ.அன்ரன் திலகரட்ணம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதி கிளை முகாமையாளர் வ.சண்முகநாதமுதலி, யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் க.இ.கமலநாதன் , இலங்கைவங்கியின் காங்கேசன்துறை கிராம முகாமையாளர் பே.பிரான்சிஸ் ஆகியோர் பங்குபற்றுவர். (201)

# சமய சந்நிதிகளில்

சுழிபுரம், ஜூன் 27

தொல்புரம் - வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பெரும் திருவிழா இன்று சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித்தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (201)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 27

சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி திருக்கோயிலில் பெருந்திருவீழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 5 ஆம் திகதி சித்திரத்தேர் வெள்ளோட்டவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் 7 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (06)


## விற்பனைக்கு

★ புறொயிலர் 1Kgக்கு ரூ.100 குறைக்கப்பட்டுள்ளது.
அத்தோடு கல்பேட் விற்பனைக்கு உண்டு.

தாசன் பாம்,
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

★ ½ HP நீரிறைக்கும் மோட்டர் (நல்ல நிலையில் உள்ளது ஒரு மாதம் பாவித்தது)
★ 50 அடி (1 இஞ்சி) நீர்குழாய் (Hose Pipe)
★ 01 கைநீர்பம்பி (Hand Pump)

பரணி தொழில் நுட்ப சேவை
166, நாவலர் வீதி, யாழ். தொ.பே021 222 7442

## ஆசிரியர் தேவை

★ தரம் 8 பிள்ளைக்கு விஞ்ஞானம், கணிதம் கற்பிக்கக் கூடியவர்.
★ தரம் 1, 2, 3 பிள்ளைகளுக்கு கற்பிக்கக் கூடியவர்கள்.

பரணி தொழில் நுட்ப சேவை
166, நாவலர் வீதி, யாழ். தொ.பே021 222 7442


# மரண அறிவித்தல்கள்

## அருட்சகோதரி புறூடன்சியா பொன்னையா(A.C)



வசாவிளான், உத்தரிய மாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கார்மேல் கன்னியர் மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்சகோதரி புறூடன்சியா பொன்னையா (A.C) (அமுதநாயகி) நேற்று 26.06.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், மங்களநாயகி (திருகோணமலை ), காலஞ்சென்ற புஸ்பநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அரசரத்தினம், மற்றும் குணரத்தினம் (கனடா) , ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.06.2009) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

புனித சூசையப்பர் ஆலயம்,
அச்சுவேலி.

அருட்தந்தை.
இ.பீற்றர்துரைரட்ணம்.

## சின்னத்தம்பி நடேசமூர்த்தி



(இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர், அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு, தோப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடேசமூர்த்தி (இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர் -அச்சுவேலி) 25.06.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி- அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் லோகநாதன்-நல்லபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சிறீமதியின் (சித்திரா) பாசமிகு கணவரும் பிருந்தா (சுவிஸ்), பிரசாந்(சுவிஸ்), பிரதீபா(லண்டன்) ஆகியோ ரின் அன்புத் தந்தையும் சிவஞானசுந்தரமூர்த்தி, சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), திவாகரமூர்த்தி, பாஸ்கரமூர்த்தி (பிரான்ஸ்), லோகநாயகி (திருகோணமலை), பத்மநாயகி, வசந்தநாயகி (வவுனியா), சாந்தநாயகி, ஜெயநாயகி (கொழும்பு), கிருஷ்ணநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திரகுமார் (சுவிஸ்), பிரசன்னா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், குமாரசுவாமி தனபால சிவரஞ்சிதன், காந்தன், பார்த்தீபன்(சவுதிஅரேபியா), விஜயகுமார் (மலேசியா), ஸ்ரீ பதி ஐயர், இராசம்மா, தவநேசமணி, குமுதினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி தோப்பு இந்து மயானத்தில் பகல் 12 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஆஸ்பத்திரி வீதி.
அச்சுவேலி தெற்கு. அச்சுவேலி.

மனைவி ந.சிறீமதி(சித்திரா)
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வடக்குத் தேர்தல்களைக் கண்காணிக்க சர்வதேசப் பார்வையாளர்கள் அவசியம்

நீண்ட காலத்துக்குப் பின்னர் யாழ்.மாநகரசபைக்கும் மற்றும் வவுனியா நகரசபைக்குமான தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. இந்தத் தேர்தல்களுக்கான வேட்பு மனுத்தாக்கலும் முடிவுற்று விட்டது. சூடு பறக்கும் தேர்தல் பிரசாரங்களின் பின்னர் இன்னும் ஏழு வாரங்களில் இந்த இரண்டு தேர்தல்களுக்கான வாக்களிப்பும், ஊவா மாகாண சபைக்கான தேர்தல் வாக்களிப்போடு சேர்த்து நடைபெறவிருக்கின்றது.

தமிழர் பிரதேசங்களில் இரு உள்ளூராட்சி சபைகளுக்கும் - அதுவும் ஒரு மாநகரசபைக்கும், நகரசபைக்கும் - நடைபெறும் தேர்தல் என்றாலும், இதற்கு அப்பாலும் இந்தத் தேர்தலில் ஆழமான அம்சங்கள் பொதிந்திருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளை அடியோடு அழித்துச் சிதறடித்து விட்டதாக அரசுத் ·தரப்பு அறிவித்த கையோடு தமிழர்களின் முக்கிய இரு நகரங்களில் அரசு நடத்தும் தேர்தல்கள் இவை.

அதுவும், விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதான அறிவிப்புக்குப் பின்னர், தமிழ்த் தேசியம் பேசுவோர் ஒரு கன்னையிலும், அதற்கு மாறாகத் தென்னிலங்கை அரசுத் தரப்புடன் தோழமை பூண்டவர்கள் பிறிதொரு கன்னையிலும், இந்த இரு தரப்புகளுடனும் சாராதவர்கள் மற்றொரு கன்னையிலுமாகப் பிரிந்து நின்று தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தங்களை முன்னிறுத்திக் காட்ட முயலுகின்ற சோதனைக் களமாக இந்தத் தேர்தல் உருவெடுத்திருக்கின்றது. இதனால் இத்தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது.

அது மட்டுமல்ல. இத் தேர்தலில் நேரடியாகப் போட்டியிடும் அரசியல் கட்டமைப்புகளுக்கு அப்பால் சில 'மர்ம சக்திகளும்' இத்தேர்தலுடன் நேரடியாக சம்பந்தப்படும் அறிகுறிகள் தென்படுகின்றன.

அரசியல் கட்டமைப்பின் பேரில் குடாநாட்டுப் பத்திரிகைகளில் வல்வந்தமாகப் பிரசுரிக்கச் செய்யப்பட்ட அறிக்கை இத்தகைய கருத்து நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கின்றன.

ஆகவே, இத்தேர்தல்கள் வெறுமனே இரு உள்ளூராட்சி சபைகளுக்கான நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு என்பதனை விட, புலிகள் இயக்கத்தின் முழு அளவிலான பின்னடைவின் பின்னர் இலங்கைத் தமிழர்களின் மனநிலையை உலகுக்கு - சர்வதேச சமூகத்திற்கு - நாடி பிடித்துக் காட்டுவதற்கான அமிலச் சோதனையாக பல தரப்பினராலும் முன்னிறுத்திக் காட்டும் ஒரு விடயமென மாற்றபட்டு வருகின்றது.

இந்தச் பின்புலத்திலேயே இத்தேர்தல்களில் நேரடியாக ஈடுபடும் அரசியல் சக்திகள், கட்சிகள் என்பவற்றுக்கு அப்பால் சில தரப்புக்கள், சக்திகள் மறைமுகமாகத் தமது கைவரிசையைக் காட்டி இத்தேர்தல்களின் போக்கையும் முடிவையும் திசை திருப்பி விடும் ஆபத்து அதிகம் ஏற்பட்டிருக்கின்றது.

தவிரவும், நீண்ட காலத்தின் பின் நடைபெறும் இத்தேர்தல்களில் மோசடிகள், முறைகேடுகள், தில்லுமுல்லுகள், ஆள்மாறாட்டங்கள், அச்சுறுத்தல்கள் என்று பல இசகு பிசகுகள் இடம் பெறுவதற்கான சாத்தியங்கள் அதிகம் காணப்படுவதும் கண்கூடு.

எப்போதும் தனது கட்சியினதும் தனது தரப்பினதும் தனித்துவத்தைப் பேணுவதில் இதுவரைகாலமும் அதிக ஈடுபாடும் இறுக்கமும் காட்டி வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. கட்சி கூட இம்முறை வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட இணங்க வேண்டிய இக்கட்டு. காலத்தின் நெருக்கடி மற்றும் எதிர்கால சமூக நலன் ஆகியவை கருதி ஓர் அரசியல் தந்திரோபாய உத்தியாக - நகர்வாக - இப்படி வெற்றிலைச் சின்னத்தில் அரசுத் தரப்புடன் இணைந்து போட்டியிடுவதற்கு ஈ.பி.டி.பி. இணங்கி வந்திருந்தாலும் கூட - அந்த இணக்கத்துக்கான விளக்கத்தை எத்தகைய விஸ்தாரணம், விவரமாக அக்கட்சி வெளிப்படுத்தியி ருந்தாலும் கூட - அத் தீர்மானத்தில் தெற்கின் அழுத்தம் ஆழமாக இழையோடுவதைத் தமிழர்கள் உணராமல் இல்லை.

'வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர் தாயகம்' என்பதை வலியுறுத்தி 'மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி' என்ற மகுட வாக்கியத்துடன் இயங்கி வரும் அக்கட்சியினால் இன்றைய நிலையில் வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தை உறுதிப்படுத்த இயலாமல் இருந்தாலும், அதற்காக அக்கட்சியையோ, அதன் தலைமையையோ தனிப்பட்டுக் குறை கூற முடியாது என்பதைத் தமிழர்கள் அனைவரும் ஏற்பர். ஆனால் 'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்ற கோசம் 'மாநகரசபையிலும் கூட கூட்டாட்சிதான்' என்ற நெருக்கடிக்குள் சிக்கியிருப்பது தமிழர் தரப்புகளின் மீதான தெற்கின் அரசியல் அழுத்தங்களை துலாம்பரப்படுத்தப் போதுமானதாகும். இத்தகைய அழுத்தங்களுக்கு 'டிமிக்கி' கொடுத்து, மாநிலத்தில் தமிழரின் சுயாட்சி என்ற தங்களது பிரதான நிலைப்பாட்டை தாம் எப்படி எட்டுவார்கள் - நிலைநிறுத்துவார்கள் - என்பதை அக்கட்சியினர்தான் எதிர்காலத்தில் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இப்படி இந்தத் தேர்தல்களிகல் அதிகாரத்தில் இருக்கும் அரசுத் தரப்புடன் இணைந்து களத்தில் குதிப்போருக்கே நெருக்கடிகள் இருக்கும் போது ஏனைய தரப்பினர் எதிர் கொள்ளப் போகும் சிக்கல்கள் சொல்லித் தெரிய வேண்டியவை அல்ல.

இதனால்தான் இத்தேர்தல்கள் நேர்மையானவையாகவும், நியாயமானவையாகவும், சுதந்திரமானவையாகவும் நடத்தப்பட வேண்டுமானால் அதற்குச் சரியான கண்காணிப்புக்கு குழுக்கள் களத்தில் செயல்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

உள்ளூர் மற்றும் உள்நாட்டு கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக சர்வதேசப் பார்வையாளர் மற்றும் கண்காணிப்பாளர்களை - இத்தேர்தலின் முக்கியத்துவம் கருதி - அழைப்பது அவசியமாகின்றது. தேர்தலில் பங்கு பற்றும் தரப்புக்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து இதற்கு வற்புறுத்துவது, வலியுறுத்துவது அவசியமாகும்.

## கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி முடித்த ஆசிரியர்களுக்கு நலன்புரி நிலையங்களிலுள்ள பாடசாலைகளில் நியமனம்

அச்சுவேலி, ஜூன் 27

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சியை முடித்து வெளியேறியவர்களில் வடக்கு மாகாணத்தில் நியமனம் பெறுபவர்கள் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் உள்ள மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு ஏற்புடைய முறையில் பாடசாலைகள் வழங்கப்படவுள்ளன.

கல்வியியல் கல்லூரி டிப்ளோமா சான்றிதழ் பெற்ற ஆசிரியர்களுக்கு நலன்புரி நிலையப் பாடசாலைகளில் நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு பூர்த்தி செய்துள்ளது.

இந்த வகையில் வடக்கு மாகாணத்தில் நியமிக்கப்பட்ட 227 ஆசிரியர்கள் நலன்புரி நிலையப் பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

இது தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்-

வடக்குக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களால் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கின்ற குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் தவிர ஏனையோர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கற்பித்தல் பணியில் ஈடுபடுவதற்கு ஏற்றவகையில் பாடசாலைகள் வழங்கப்படவுள்ளன. இவர்கள் உடனடியாகக் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும். அத்துடன் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களும் மூன்றாம் தவணை ஆரம்பத்தில் தாம் நியமனம் பெற்ற பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சேவையாற்றுவதற்கு ஏற்றவகையில் தற்காலிக இணைப்பில் இருந்து விடுவிக்கப்படவுள்ளனர் என்றார்.

இடம்பெயர்ந்து நலன்புரிநிலையங்களில் உள்ள மாணவர்களுக்கு சேவையாற்ற வகைசெய்யும் வகையில் தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்களை விடுவிக்குமாறும் அவர்களை நியமனம் பெற்ற பிரதேச மாணவர்களுக்கான கற்பித்தல் பணியில் ஈடுபடுத்துமாறும் மத்திய கல்வி அமைச்சு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-11)

## இலங்கையின் அரசியல் இணக்கப்பாட்டுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கும்

### தெற்காசியாவுக்கான உதவிச் செயலாளர் றொபேட் ஓ பிளேக்

இலங்கையில் அரசியல் இணக்கப்பாடு ஏற்படுவதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் தமது அழுத்தத்தைக் கொடுக்கும் என அமெரிக்காவின் தெற்காசிய மற்றும் மத்திய ஆசியாவிற்கான உதவி செயலர் றொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ள அவர் யுத்தத்தின் பின்னர், முன்னேற்றங்கள் அவசியம் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை அரசு வடக்கு பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடித்து முக்கியமான வெற்றியை பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

இந்த நிலையில் இடம்பெயர்ந்துள்ள சுமார் 3 இலட்சம் மக்களை உடனடியாக மீள் குடியமர்த்தி வடக்கு மாகாணத்திற்கான தேர்தல்களை அரசாங்கம் நடத்த வேண்டும் எனவும் அவர் இதன் போது கோரியுள்ளார்.

அத்துடன் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் முடிவில், சிறுபான்மையினரின் உரிமைகள் காக்கப்பட்டு, அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

13ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய ஒற்றுமை பேணப்பட்டு, அனைத்து கட்சி மாநாட்டின் மூலம் புதிய முனைப்புகள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால், அது இலங்கையில் அரசியல் இணக்கம் ஒன்றுக்கு வாய்ப்பை ஏற்படுத்தும் என்றும் றொபேர்ட் ஓ பிளேக் குறிப்பிட்டுள்ளார். (50)

## திருமறைக் கலாமன்றத்தின் 'கலை நிலா அரங்கு' இன்று

யாழ்ப்பாணம்,ஜூன் 27

யாழ்.திருமறைக் கலாமன்றம் நடத்தும் மாதாந்த அரங்க நிகழ்வான 'கலைநிலா அரங்கு' இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு 'கலைத்தூது கலையகத்தில்' இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்களின் நடனங்கள், பாட்டு, ஓர்கன் இசை போன்றவற்றுடன் புனித பத்திரிசியார் கல்லூரி ஆரம்பப்பிரிவு மாணவர்களின் நடனம், திருமறைக் கலாமன்ற இளையோர் அவையின ரின் நாடகம் என்பனவும் சிறப்பு நிகழ்வாக பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன.(50-9)

## பாதிக்கப்பட்ட அதிபர்களுக்கு 7 ½ வருடங்களின் பின்னர் விமோசனம்

அச்சுவேலி, ஜூன் 27

இலங்கை அதிபர் ஆள்சேர்ப்புச் செய்யப்பட்ட விளம்பரத்துக்கும் பதவி உயர்வு தொடர்பாக வழங்கப்பட்ட நியமனத்துக்கும் இடையே உள்ள வேறு பாட்டினால் பாதிக்கப்பட்ட 382 அதி பர்களுக்கு 7½ வருடங்களின் பின்னர் விமோசனம் கிடைத்துள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 3க்கு ஆள்சேர்ப்புச் செய்ய விளம்பரம் செய்த தரநிலை 1989 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் வகுப்பு 3: வகுப்பு 2 II வகுப்பு 2 I வகுப்பு I என மாற்றப்பட்டது.

2002.01.01 இல் பதவி உயர்வு தொடர்பான நியமனக் கடிதம் வழங்கும்போது தரம் என்பதை வகுப்பு என்பதற்கு சமமானது எனக்கருதியதால் பதவி உயர்வு பெற்ற 382 அதிபர்களும் உரிய வகுப்பு சம்பளம் பெற முடியாமல் குறைந்த சம்பளம் பெற்று வந்தனர்.

இது தொடர்பாக அதிபர்சேவை தொழிற்சங்கங்கள் இதைச் சுட்டிக் காட்டிய போதிலும் 7 1/2 வருடங்களாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் இழுபறியில் இருந்து வந்தது. கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்த அண்மையில் அமைச்சரவை யில் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத் திரத்தின் மூலம் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பதவிப் பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட அதிபர் களுக்கு தரமாற்றம் செய்யப்பட்டு வகுப்பு தரநிலையில் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 இற்கு உரிய சம்பளம் வழங்குவதற்கு வசதிகள் செய்யப்படுகின்றன.

இது தொடர்பாக இலங்கை தரம் பெற்ற அதிபர்கள் சேவைச் சங்கத்தின் உபதலைவர் அன்பு ஜவர்ஷா தகவல் தருகையில்,

நீண்டகாலமாக சங்கம் இந்த விடயம் தொடர்பாக சுட்டிக்காட்டி வந்த போதிலும் இந்த வருடம் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டுள்ளது-

அதிபர் சேவையில் தரநிலை வகுப்புத் தரத்திற்கு மாற்றஞ்செய்யப்படுவதன் மூலம் சம்பந்தப்பட்ட அதிபர்கள் மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா வரையில் சம்பள அதிகரிப்பினை பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வகையில் இவர்களுக்கு 7 ½ வருடங்களுக்கான சம்பள நிலுவையும் பெற்றுக் கொள்ள முடியும் -என்றார். (50-11)

## 'உலகின் மூன்றாவது கண்' நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 27

காவலூர் இ.விஜேந்திரன் எழுதிய'உலகின் மூன்றாவது கண்' அறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஜூம்மா பள்ளி வாசல் வீதியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் எஸ்.ஜோசப்பாவா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் ஊடகவளங்கள் பயிற்சி மையப் பணிப்பாளருமான பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார்.

நூலின் முதல் பிரதியை அன்னை புத்தகசாலையைச் சேர்ந்த செ.விஜிதரன் பெற்றுக்கொள்வார். (201)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 14 | 28.06.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | சஷ்ரி |
| | பி.ப. 12.44 வரை |
| நட்சத்திரம்: | பூரம் |
| | பி.ப. 04.25 வரை |
| சுபநேரம்: | 08.55 - 10.25 |
| ராகுகாலம்: | 04.25 - 05.55 |

## மாவைக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த காம்யோற்ச விழா இன்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூன் 27

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் காம்யோற்சவத் திருவிழாக்கள் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஷேத்ரபால ஆராதனையும், ஜூலை முதலாம் திகதி சண்முகப் பெருமான் திருநடன விழாவும், 8 ஆம் திகதி சண்முகார்ச்சனையும், 17 ஆம் திகதி திருக் கார்த்திகை விழாவும் சிறப்புற நடைபெறவுள்ளன. எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசையன்று கீரிமலை புனித ஸ்தலத்தில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

ஆலயத் திருவிழா நாள்களில் தமிழகம், தஞ்சாவூர் பிரபல வித்துவான்களான பழனிச்சாமி நடராஜ், நாராயண சாமி நல்லகுமார் குழுவினரின் விசேட தவில் - நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும். திருவிழாக் காலம் முழுவதும் காலை 7 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளன. திருவிழாக் காலங்களில் அடியவர்கள் முருகப்பெருமானை வழிபடுவதற்கு வசதியாக இலங்கை போக்குவரத்துச்சபை வழமைபோல் தெல்லிப்பழை சோதனைச் சாவடியிலிருந்து போக்குவரத்துச் சேவையினை நடத்தும்.

ஆலய திருவிழாக்களுக்கு வருகை தருவோர் தெல்லிப்பழை சோதனைச் சாவடியில் ஆலயத்திற்கு வருவதற்கான விசேட அனுமதியை இரண்டு நாள்களுக்கு முன்னரே பெறுவதற்கான வசதிகள் செய்யப்படும் என்றும் ஆதீன நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பிரதேச செயலகத்தில்
அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றி
இலங்கை திட்டமிடல் சேவைக்கு பதவி
உயர்வு பெற்றுச் செல்லும்

### திரு.கதிரவேற்பிள்ளை ஜெயக்குமார்

அவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும்
பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,*
*பிரதேச செயலகம்,*
*கரவெட்டி.* (சி/559222)

பிரதேச செயலாளரும்,
உத்தியோகத்தர்களும்.

## திருமண சேவை

80ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவும், 81ஆம் ஆண்டு B.Sc. அமெரிக்காவும், 75ஆம் ஆண்டு கனடாவும், 80ஆம் ஆண்டு லண்டனும் பிரஜா உரிமை பெற்ற மணமகன்களுக்கு படித்த, அழகான மணமகள்மார் தேவை. 77ஆம் ஆண்டு பாவம் கூடிய CIMA Accountant இற்கும், 76ஆம் ஆண்டு ரஷ்யா டாக்டருக்கும், 80ஆம் ஆண்டு செவ்வாய் உள்ள B.Sc.க்கும், மேலும் பட்டதாரி ஆசிரியர்கள், டாக்டர்கள், இஞ்சினியர்கள், லிகிதர்கள், வர்த்தகர்கள், வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் எம்மிடம் உள்ளனர். அத்தோடு 75ஆம் ஆண்டு லண்டன் பிரிஜா உரிமை பெற்ற மணமகளுக்குப் படித்த லண்டனில் பிரஜா உரிமை இல்லாத மணமகன் என்றாலும் விரும்பத்தக்கது. (முக்கியம் படிப்பு)

தொடர்பு: காலக்கண்ணன் திருமண சேவை,
171/7, மனோன்மணி அம்மன் கோயிலடி,
நல்லூர் வடக்கு வீதி, நல்லூர். T.P.No.: 077 6070862

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 ★ 09 ★ 1946



உதிர்வு 07 ★ 07 ★ 2008

### அமரர் சுப்பிரமணியம் பாலசரஸ்வதி

திதி: பஞ்சமி (27.06.2009)

**ஆண்டு ஒன்று சென்றாலும்**
**அகலவில்லை நின் நினைவுகள்**
**என்றும் வாழ்வாய் எம் இதயத்தில்!**

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அம்பனை, சுன்னாகம் மேற்கு,*
*சுன்னாகம்.* (86617) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 26 ★ 05 ★ 1935



மறைவு 28 ★ 05 ★ 2009

### திருமதி சுந்தரம் தெய்வானை

யா/துன்னாலை தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபர் திரு.சுந்தரம் செல்வராசா அவர்களின் பாசமிகு தாயார் திருமதி சுந்தரம் தெய்வானை அவர்கள் காலமான செய்தியறிந்து நாம் பெரும் துயரம் அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர் சங்கம்,
கரவெட்டிக் கோட்டம்.

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி புறுடன்சியா (அ.கா.)

*(அப்போஸ்தலிக்க கார்மேல் சபை)*



பத்தாவத்தை, இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்.கார்மேல் மடத்தைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி புறுடன்சியா (அ.கா) நேற்று (26.06.2009) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.06.2009) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு கார்மேல் மடத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, புனித மரியாள் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். பின்னர் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம். இவ்அறிவித்தலை அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், உற்றார், உறவினர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*யாழ்ப்பாணம்.* (சி/559227) கார்மேல் மடத்தலைவி.

## வழுக்கையாறு திட்டம்; முக்கிய கூட்டம் திங்களன்று

யாழ்ப்பாணம், ஜூன் 27

'நியாப்' திட்டத்தின் கீழ் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் புனரமைக்கப்பட்டுவரும் வழுக்கையாற்றின் 4.70 கிலோ மீற்றரில் இருந்து 12.575 கிலோ மீற்றர் வரையான வாய்க்கால் புனரமைப்புத் தொடர்பான உறுதிப்படுத்தல் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புனரமைப்பு வேலைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் இத்திட்டத்துடன் தொடர்புடைய பயனாளிகளையும் விவசாய அமைப்புப் பிரதிநிதிகளையும் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் கேட்டுள்ளார்.

(1-203)

## வாடகைக்கு விடப்படும்

நிறுவனங்களுக்கும், ஆண்களுக்குமான வீடு, அறைகள் Brown Road, முதலாம் ஒழுங்கையில் வாடகைக்கு உண்டு.
தொடர்பு - 0779578244

## வேலை ஆள் தேவை

அப்பள வேலை செய்வதற்கு ஆண்/பெண் இருபாலரும் உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு - இ.மகேஸ்வரன் ரீவிரப்ளியா
(ஆர்ப்பாபா சாலை அருகில்) K.K.S வீதி, இணுவில்.

## வீடு உடன் தேவை

கட்டைப்பிராய்க்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் பருத்தித்துறை வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு, உடன் தேவை.
தொடர்பு - 021 222 5796
077 408 3656

## வீடு, வளவு விற்பனைக்கு

7/1,நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் உள்ள சகல செதிகளும் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. Include Sales Agreement Facilities (K.K.S.Road இல் இருந்து சம்பியன் லேன் ஊடாக வரவும்)
தொடர்பு:- Dr.T.குலசிங்கம்
தொ.பே:-0772367500

## இறைச்சிக்கோழி விற்பனை

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும், பெற்றுக் கொள்ளலாம்.

**செம்மணிபாம்**
*77/3, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு.*

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

*யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று (27.06.2009) சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

பழைய மாணவர் சங்கம்.

## தவறிவிட்டது

சுன்னாகம் தெற்கு, சபாபதிப்பிள்ளை வீதியைச் சேர்ந்த சீவரத்தினம் ஜெயராசா என்பவரது தே.அ.அ (680554498V) சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P - 0775396380

## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே. என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓ! பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி!

அடியார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி யோகேஸ்வரி சிவஞானம்



(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், மந்திகை, பருத்தித்துறை)

வடமராட்சி, கரணவாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் நியூசிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி சிவஞானம் (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, மந்திகை, பருத்தித்துறை) கடந்த (24.06.2009) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சிவஞானத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைரமுத்து - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் (மாத்தளை அப்பா) - சிவகாமி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, சபாரத்தினம், தங்கம்மா, வாலாம்பிகை மற்றும் சின்னதங்கம் (கரணவாய்), தனபாலசிங்கம் (ஓய்வுபெற்ற அஞ்சலதிபர், கரணவாய் மத்தி) மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவானந்தரூபன் (நியூசிலாந்து), சிவராமன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் மேனகா, சிவாஜினி ஆகியோரின் அருமை மாமியும் சிவலோஜன், சிவதேனுஜன், அனுபரன், சிவகேசவன் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27 ஆம் திகதி நியூசிலாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாளம்பன்,*
*கரணவாய்மத்தி,*
*கரவெட்டி. 0776076206*

தகவல்: சிவானந்தரூபன் (006496296644) (மகன்).
சிவராமன் (006496296456) (மகன்).

### R.R.அப்பாத்துரை

(இளைப்பாறிய ஆசிரியர் - நயினாதீவு)

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில், கனடா ஆகிய இடங்களில் வசித்தவருமாகிய இராமலிங்கம் இராமுப்பிள்ளை அப்பாத்துரை (இளைப்பாறிய ஆசிரியர் ) 25.06.2009 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியினரின் புதல்வரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-இளையநாச்சி தம்பதியினரின் மருமகனும், ராசம்மா (இளைப்பாறிய ஆசிரியை - கனடா)வின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, தங்கரெத்தினம், பூபாலசிங்கம் (ஸ்தாபகர், பூபாலசிங்கம் புத்தகசாலை) விஜயரட்ணம், கணேசன், பூமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, கந்தசாமி, கனகம்மா, ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுந்தரேசன் (U.K), வாகீசன் (U.K), தியாகேசன் (Australia), அனுசூயா, கஸ்தூரி, அழகேசன் (Canada), ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகேஸ்வரி, அனுஷா, கோணேஸ்வரி, பாலேஸ்வரன், அருட்செல்வன், அபர்னா, ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7ஆம் வட்டாரம், நயினாதீவு.*
T;P.0778802586
*மணியக்காரர் லேன்,*
*கொக்குவில் கிழக்கு.*
T;P.0212225668

தகவல்: சி.பொ.வீரவாகு (மைத்துனர்)
திருமதி பரமேஸ்வரி நல்லதம்பி
திருமதி லலிதாம்பாள் நாகேஸ்வரன்.

### தம்பையா இராசையா

(முன்னாள் உரிமையாளர், *Jaffna Stores* மாத்தறை, காலி, அக்குறஸ்ஸ, நெடுங்கேணி)



யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சம்பியன் லேன், கொக்குவிலை வசிப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பு, கொட்டாஞ்சேனையில் வசித்து வந்தவருமான தம்பையா இராசையா (25.06.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - தையல்முத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம்-சிவக் கொழுந்து தம்பதியினரின் மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் பாலகுமார் (இலங்கை), இரவீந்திரகுமார் (சுவிஸ்), இராஜ குமாரி (இலங்கை), விஜயகுமார் (ஜேர்மன்), யோககுமார் (சுவிஸ்), செல்வக்குமாரி (கனடா), உதயகுமாரி (சுவிஸ்), ஜெகதலக்குமார் (சுவிஸ்), சாந்தகுமாரி (லண்டன்) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற லதா (இலங்கை), காவேரி (சுவிஸ்), காலஞ்சென்ற மகேந்திரராசா (இலங்கை) மற்றும் தவராணி (ஜேர்மனி), நந்தினி (சுவிஸ்), றஞ்சிதன் (கனடா), குணம் (சுவிஸ்), நிறையா (சுவிஸ்), சிறீதரன் (லண்டன்) ஆகியோரின் மாமனும் சாரதா, தாரணி, பிரதீபன், தர்சிகா, தர்சினி, ஜமுனா, நிரோசா, கரிகரன், பிரகலாதன் (Electonic Engineer, U.k), Dr.கமலதாஸன், நிரஞ்சன் (மருத்துவபீட மாணவன்), அஜீவி, அபிமான், பிரியந்தன், சங்கீதன், நிசானா, றஜித்தன், றஜீவி, ஜெனன், கௌதமன், பிரஜித், ஜெனின், திலக் ஆகியோரது பேரனும் லோஜிதனின் பாட்டனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (27.06.2009) சனிக்கிழமை மாலை 5 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Mr.R.Vijiyakumar
76297 BIANKNLOCH
BLUMEN STR-10
Stutensee
GERMANY

தகவல்:
இ.விஜயகுமார் (விஜயன்)
மகன்

(சி/559226)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.நகரப் பகுதியில் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்.பஸ்தரிப்பு நிலையப் பகுதியில் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முடிவு திகதியைப் பாராமல் பொருளை வாங்கிவிட்டு அவசரமாக பஸ்களில் ஏறிச் செல்வோர் அப்பொருள்களை வீட்டுக்கு கொண்டுசென்று ஏமாற்றம் அடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிஸ்கட் வகைகள் மற்றும் இனிப்பு வகைகள் ஆகியனவே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுன்வரவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203-78)

## வாழ்வாதாரத்தை மேம்படுத்த பசுமாடுகள் வழங்கப்பட்டன

வடமராட்சி, ஜூன் 27

வடமராட்சி கிழக்கு, அம்பன் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக 17 குடும்பங்களுக்கு தலா ஒரு பசுமாடு வீதம் 17 பசு மாடுகளை கியூடெக்-கரித்தாஸ் நிறுவனம் வழங்கியுள்ளது.

இவை ஒவ்வொன்றும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியானவை.

இக்கிராமத்தில் உள்ள ஏனைய குடும்பங்களுக்கும் இவ்வாறாக உதவிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன. (203-236)

## கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் வாரத்தில் 5 நாள்களும் விசேட சிகிச்சை

வண்ணை, ஜூன்27

கைதடி, அரச ஆயுள்வேத வைதிய சாலையில் வாரத்தில் 5 நாள்கள் விசேட சிகிச்சைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக வைத்தியசாலை பொறுப்பதிகாரி திருமதி பிரேமா சிவசண்முகராஜா தெரிவித்தார்.

நவீன சிகிச்சை முறைகளில் கடும்பத்தியம் தவிர்க்கப்பட்ட மருந்து வகைகளையே நோயாளர்களுக்கு வழங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச் சிகிச்சைகள் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெறுகின்றன.

திங்கட்கிழமைகளில் மகளிருக்கான மருத்துவம், செவ்வாய்க்கிழமைகளில் விசகடி, புதன்கிழமைகளில் மதுமேகம் சலரோக சிகிச்சை, வியாழக்கிழமைகளில் குழந்தைகள் மருத்துவம், சனிக்கிழமைகளில் சிறப்பு மருத்துவ சோதனைகளாக தோல், மூட்டு, எலும்பு, மாளசிகரோம் என்பவற்றுக்கு பட்டமேற்படிப்பை முடித்த மருத்துவர்களாலும் பாரம்பரிய வைத்திய முறையில் பதிவுபெற்ற விசகடி மருத்துவராலும் சிகிச்சைகள் வழங்கப்படுவதாகவும் வைத்திய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (203- 160)

## வடக்கின் வசந்தத்தின் கீழ் ஆனைக்கோட்டையில் அபிவிருத்தி

நவாலி, ஜூன் 27

வடக்கின் வசந்தத்தின் கீழ் ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் பல அபிவிருத்தித்திட்ட வேலைகள் கிராம சேவையாளர் ஒ.நிசாந்தன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் ஆனைக்கோட்டை அரசினர் வைத்திய சாலை வீதியிலுள்ள கிராம சேவையாளர் அலுவலகம், முதியோர் பகல் பராமரிப்பு நிலையம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் காணிகள் மற்றும் மூத்த நயினார் ஆலய வீதிகள், காணிகள் என்பன சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து காக்கைதீவு, சோமசுந்தரம் வீதி, கல்லுண்டாய்ப் பகுதி வீதிகள், கால்வாய்கள் என்பனவும் திருத்தம் செய்யப்படவுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியநாயகம் ஜெகூ, உதவிப் பிரதேச செயலர் ஆகியோர் பார்வையிட்டுவருகின்றனர்.

இந்த அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கே இனிவரும் காலத்தில் உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் வெள்ளை அட்டை நிவாரணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (203-100)

# எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடியவாறு இணக்க அரசியலை முன்னெடுப்பதே உகந்த வழி

## அமைச்சர் டக்ளஸிடம் யாழ்.ஆயர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

தேசிய உணர்வைக் கட்டி எழுப்பும் தேவை மேலோங்க வேண்டும். இதனூடாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கௌரவமான அரசியல் தீர்வு எமது மக்களுக்குக் கிடைக்க வேண்டும். இன்றைய நிலையில் இணக்க அரசியல் இன்றி தனித்து எதையுமே செய்ய முடியாது என யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி மாலை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை யாழ்.ஆயர் தனது உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி சந்திப்பின்போது தற்கால அரசியல் நிலைமைகள், தமிழ்பேசும் மக்களது எதிர்கால எதிர்பார்ப்புகள் மற்றும் அரசியல் அபிலாஷைகள், அவற்றைத் தீர்ப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகள், அரசியல் தீர்வு முயற்சிகள் மற்றும் தமிழ் பேசும் மக்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாடு போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் அமைச்சர் யாழ். ஆயருக்கு விரிவாக எடுத்து விளக்கியதுடன் எதிர்வரும் யாழ்.மாநகர சபைக்கான தேர்தலில் இணக்க அரசியலை முதன்மைப்படுத்தி எமது மக்களின் நன்மை கருதி ஈ.பி.டி.பி வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட முன் வந்தமை தொடர்பிலும் எடுத்துக் கூறினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களை மிகுந்த சிரத்தையுடன் செவிமடுத்த யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அரசியல் பகிர்வை முதன்மைப் படுத்திய தீர்வுத் திட்டத்தை எந்த இடத்தில் ஆரம்பிப்பது நல்லதோ, அதே இடத்தில் இருந்து ஆரம்பிக்கும்படி அமைச்சருக்கு எடுத்துக் கூறியதுடன் வன்முறை சார்ந்து சென்றவர்கள் அனுபவித்துள்ள துன்பியலில் இருந்து நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இன்றைய சூழ்நிலையில் இணக்க அரசியலை முன்னெடுப்பதே உகந்த வழி என்றும் தெரிவித்தார். (50-111-224)

## கூட்டுப்பசளை தயாரிக்க தொட்டிகள் அமைப்பு

சுழிபுரம், ஜூன் 27

கழிவு இலைகளை ஒன்றுசேர்த்து கூட்டுப் பசளை தயாரிப்பதற்காக வட்டுக்கோட்டையில் நிரந்தரமான தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன.

கட்டப்பட்ட தொட்டிகளில் கழிவுகளைப் போடும் நடவடிக்கையை வட்டுக்கோட்டையில் இயங்கும் தேசவள சம்மேளனத்தினர் செயற்படுத்தி வருகின்றனர்.

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய பிரதான வீதிக்கு அருகில் உள்ள அரச நிலத்தில் பெரிய தொட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோல் வேறு இடங்களிலும் தொட்டி அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தொட்டிகளில் சேரும் குப்பைகள் ஒன்று சேர்க்கப்பட்டு பசளையாகப் பயன்படுத்தப்படவுள்ளன. (203-28)

## யாழ்.மாநகர சபைத் தேர்தல்

## ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தல் பிரசாரத்தை நேற்று ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்.மாநகர சபை தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சி.உதயன், யாழ். மாநகரசபையின் முதன்மை வேட்பாளர் கே.தெய்வேந்திரன், நெடுந்தீவு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் புலவர் அரியநாயகம், கட்சியின் அரசியல் பொறுப்பாளர் பசுபதி, யாழ்.பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் ரி.மனோகரன் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் நூற்றுக்கணக்கான கூட்டுறவாளர்கள் கலந்துகொண்டனர். (50-224)




வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அச்சுவேலி பால் உணவுப் பொருள் உற்பத்தி விற்பனை நிலையத்தின் திறப்பு விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் த.புவனேந்திரன் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் நாடா வெட்டி நிலையத்தைத் திறந்து வைப்பதையும், கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி வத்சலா அமிர்தலிங்கம் பெயர்ப்பலகையைத் திரை நீக்கம் செய்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டா[illegible] சிவபாலன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். ([illegible] அச்சுவேலிச் செய்தியாளர்)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 27

கொக்குவில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள்ஆலயவருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்27

கொடிகாமம், கச்சாய் தூய பேதுரு ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் இறுதி நாள் வழிபாடுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு நற்கருணை ஆராதனையும், நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நவநாள் திருப்பலிப் பூசையும், திருச் சொரூப பவனியும் இடம்பெறும். (204 - 131)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்27

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கும் தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்27

கொக்குவில், தாவடி, வேம்படி முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

சரவணை, பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204- 167)

* * *

சண்டிலிப்பாய், கல்வளைப்பிள்ளையார்ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்திரு விழாவும் மறுநாள் செவ்வாய்கிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

சாவகச்சேரி, கல்வயல், பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

நல்லூர், ஜூன்27

நெடுந்தீவு, நடுக்குறிச்சி பெருக்கடி சித்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மாலை 4 மணிக்கும் இடம்பெறும்.

மறுநாள் பூங்காவனத்திருவிழாவும் நடைபெறும். (204 - 111)

* * *

நல்லூர், ஜூன்27

திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திவிழாவின் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கும், தீர்த்தத்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் இடம்பெறும். (204-111)

* * *

ஆனைக்கோட்டை, உயரப்புலம் புனித அடைக்கலநாயகி ஆலயத்தின் திரு இருதயநாதர் பக்திச் சபையின் ஏற்பாட்டில் வருடாந்தத் திருப்பலியும், ஒன்றுகூடல் நிகழ்வும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 7மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறவுள்ளதாக சபையின் தலைவர் அன்ரன் மாணிக்கராசா அறிவித்துள்ளார். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்நாற்றம் வீசும் வீதிகள்

வல்வெட்டித்துறையில் [illegible] தத சில இடங்களில் கோழி வளர்ப்பில் [illegible]படுபவர்களால் அப்பகுதியில் உள்ள வீத[illegible]ளால் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கோழிக் கூடுகளில் இருந்து துர்நாற்றம் வீசுவதாலேயே பயணம் மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனால் தொற்று நோய்கள் பரவும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (203-70)

## மாணிக்க வாசகர் குருபூசை

சங்கத்தானை முருகமூர்த்தி ஆலயத்தில் மாணிக்கவாசகர் குருபூசை இன்று சனிக்கிழமை காலை தொ[illegible] நடைபெறும்.

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் குருபூசையில் புராண படனம், திருவாசக முற்றோதல், பூஜை வழிபாடுகள் ஆகியவை இடம்பெறும். (204-207)

* * *

அளவெட்டி, கேணிக்கரை வைரவர் ஆலயத்தில் மாணிக்கவாசகர் குருபூசை இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் அபிஷேகம், புராண படிப்பு, சுவாமி திருவீதி உலா வருதல் என்பன இடம்பெற்று தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும். (204)

## முதலாம் ஆண்டு அஞ்சலி



Dr.சங்கரப்பிள்ளை தங்கராணி

பிறப்பு 21*07*1921

இறப்பு 27*06*2008

அம்மா! நீங்கள் எங்களை விட்டு
பிரிந்து ஒரு வருடமாயினும்
எங்கள் மனதை விட்டு நீங்கள்
ஒரு நாளுமே நீங்கமாட்டீர்கள்
உங்கள் வஞ்சகமில்லா நல்மனதை
ஒருபோதுமே மறக்க மாட்டோம்.

(86548)

தகவல்:
Shashic Sanghra
R.Murugan
கனகசபை வீதி, மாவிட்டபுரம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
முருகன் குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 17 ★ 06 ★ 1934



விண்ணில் 07 ★ 07 ★ 2008

### திருமதி செல்லக்கண்டு அருளம்பலம்

திதி: பூர்வபக்க பஞ்சமி (27.06.2009)

பாராட்டி சீராட்டி பக்குவமாய் வழிகாட்டி
பாசமது கொண்டெம்மை பண்பு காட்டி
இன்பமாய் எம்மோடு வாழ்ந்த நினைவை
ஓராண்டு இழந்து தவிக்கின்றோம்

உடையார் லேன், கொக்குவில் கிழக்கு.
நிரந்தர முகவரி:
ஒட்டுவெளி, மிருசுவில். (86496)

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும்
நவிண்டில், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் செல்வராசா பன்னிருகரம்

திதி: 27.06.2009

மலர்வு 02.03.1946

உதிர்வு 28.05.2009

ஆலமரமாய் நின்று எமைத் தாங்கினாய்
உன் பிரிவால் இன்று நாம் உருகினோம்
ஆற்ற நீயில்லையே என ஏங்குகின்றோம்.

எங்கள் தந்தையின் இறந்த செய்தி கேட்டு துயர் பகிர்ந்து கொண்டோர், நேரில் கலந்து கொண்டோர், தொலைபேசியில் ஆறுதல் கூறி தொடர்பு கொண்டோர் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். தந்தையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
தாம்பிரா, நித்திலென்
(பேரப்பிள்ளைகள் - சுவிஸ்).

குடும்பத்தினர்.

## தசாஹ கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் விரோதி வருடம் வைகாசி மாதம் 31ஆம் நாள் (14.06.2009) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

### சிவஸ்ரீ யோகீஸ்வரக் குருக்கள் இராஜேஸ்வரி அம்மா

அவர்களின் தசாஹ கிரியைகள் ஆனி மாதம் 9ஆம் நாள் (23.06.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்றன. ஆனி மாதம் 14ஆம் நாள் (28.06.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் நடைபெறும். இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:
இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இலங்கைநாயகி அம்மன் கோயிலடி,
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (86459)

ச.யோகீஸ்வரக் குருக்கள்
குடும்பத்தினர்.

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை
## வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத்திட்டம்
## யாழ்ப்பாண மாவட்டம் - கூறு விலை கோரல்கள்

*யாழ்.மாவட்டத்தில் உள்ள மதகுகள், வீதிகளை வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல்கள்*

பெருந்தெருக்கள் அமைச்சின் நிதி வழங்கல்கள் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

1. பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA), யாழ்ப்பாணம் வடக்கின் வசந்தம் 180 நாள் திட்டத்தின் கீழ் பின்வரும் மதகுகளின் புனர் நிர்மாண வேலைக்கான மூடிய கேள்விப் பத்திரங்களைப் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம், கேள்விச் சபையின் சார்பாக பெற்றுக் கொள்வார். கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் நடைமுறை 12.07.2009 அன்று பிற்பகல் 2 மணியுடன் முடிவடையும். கேள்விப் பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் யாழ்ப்பாண காரியாலயத்தில் கிடைக்கும் கேள்விப் பத்திரப் படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் பத்திர ஆவணங்கள் 30.06.2009 தொடக்கம் 09.07.2009 வரை மீளளிக்க முடியாத கேள்விப் பத்திர கட்டணமான ரூபா 750.00 (பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

| | விபரங்கள் | ICTAD தராதரம் | பாதுகாப்பு கட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | வல்லை-உடுப்பிட்டி-வல்வெட்டித்துறை வீதியில் 4 ஆவது கி.மீ 1 ஆம் காற்பகுதியில் வடிகாலமைப்புப் புனர் நிர்மாணம் செய்தல். | M10/C9 | 5,000.00 |
| 2 | சாவகச்சேரி-புலோலி வீதியில் 16/1 இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M8/C9 | 15,000.00 |
| 3 | புலோலி-கொடிகாமம்-கச்சாய் வீதியில் 19/1 இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M8/C9 | 19,000.00 |
| 4 | கண்டி-யாழ்.வீதியில் 298/1 இலக்க மதகின் தளத்தினை மீள் நிர்மாணம் செய்தல் (Redecking) | M8/C9 | 18,500.00 |
| 5 | யாழ்-பருத்தித்துறை வீதியில் 28 ஆம் கி.மீ கடைசி காற்பகுதியில் வடிகால்வாய் நிர்மாணம் செய்தல் | M10/C9 | 5,000.00 |
| 6 | யாழ்-பண்ணை-ஊர்காவற்றுறை வீதியில் 10/1 இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M8/C9 | 12,000.00 |
| 7 | யாழ்-பண்ணை-ஊர்காவற்றுறை வீதியில் 11/1 ஆம் இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M8/C9 | 15,000.00 |
| 8 | வல்லை-தெல்லிப்பழை-அராலி வீதியில் 23/1 இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M9/C9 | 8,000.00 |
| 9 | கொக்குவில்-வட்டுக்கோட்டை வீதியில் 3/1 ஆம் இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M9/C9 | 6,500.00 |
| 10 | யாழ்-மானிப்பாய்-காரைநகர் வீதியில் 24/3 ஆம் இலக்க மதகில் பாதுகாப்புச் சுவர் கட்டுதல் (Jacket wall) | M9/C9 | 10,000.00 |
| 11 | யாழ்-பலாலி வீதியில் 1/3 ஆம் இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M8/C9 | 15,000.00 |
| 12 | யாழ்-பருத்தித்துறை வீதியில் 3/1 ஆம் இலக்க மதகு மீள் நிர்மாணம் செய்தல் | M9/C9 | 7,500.00 |
| 13 | யாழ்-பருத்தித்துறை வீதியில் 3 ஆம் கி.மீ இல் வடிகால் அமைத்தல் | M10/C9 | 5,000.00 |

2. நிறைவேற்றும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகார சபையாகும்.
3. தகுதி வாய்ந்த கூறு விலை கோருபவர்கள் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி- பால நிர்மாணத்துறையில் அந்தந்த தரங்களில் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
4. கேள்விப்பத்திர ஆவணங்களை எதுவித கட்டணமுமின்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர், கடற்கரை வீதி, யாழ்ப்பாண காரியாலயத்தில் பார்வையிடலாம்.
5. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியிலிருந்து 60 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாகும்.
6. கேள்விப் பாதுகாப்புக் கட்டணத் தொகையான மேற்குறிப்பிட்டுள்ள பெறுமதிக்குரிய பத்திரங்கள் கேள்விப் பத்திர ஆவணத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். செல்லுபடியாகக் கூடிய பாதுகாப்புப் பணப் பத்திரங்களைக் கொண்டிராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
7. முன் கேள்வி கோரல் கூட்டம் 10.07.2009 அன்று முற்பகல் 10 மணிக்கு பிரதம பொறியியல்ாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல.761, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.
8. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களின் இரு பிரதிகள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல.761, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்
9. கிடைக்கப்பெற்ற கேள்விப் பத்திர ஆவணங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல.761, கடற்கரை வீதி யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும். கேள்விப் பத்திரம் திறக்கப்படும். குறித்த நேரத்தில் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.
10. மேலதிக விவரங்களிற்கு தயவு செய்து பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம், தொலைபேசி இலக்கம் 021-222 2968, தொலைநகல் இலக்கம் 021 - 222 2968, மின்னஞ்சல் முகவரி cejaffn@rdagov.lk என்பனவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

எந்திரி.வி.சுதாகர்
பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.

எந்திரி.மோசஸ் மரியதாசன்
மாகாணப் பணிப்பாளர் / வ-கி(வ)
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.

(சி/559204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி டாக்டர் டபிள்யூ.ஆர்.கோமஸ் வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கு இடையே நடைபெற்ற லீக் முறையிலான கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக்கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# பெண்களுக்கான ஹொக்கி சுற்றுப்போட்டியில் மாவட்டச் சம்பியனானது உடுவில் மகளிர் கல்லூரி

வலி.வடக்கு,ஜூன்27

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி 2ஆவது தடவையாகவும் யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்காமல் கடுமையாக மோதிக் கொண்டன. எனினும் போட்டியின் முதற் பாதி ஆட்டத்தில் அருணோதயாக் கல்லூரி ஒரு கோலைப் பெற்று முன்னணியில் காணப்பட்டது.

இரண்டாம்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் வெற்றிக் கனியை எப்படியும் பெற வேண்டும் என்ற வேகத்துடன் களமிறங்கி மோதிக்கொண்டன.

இரண்டாம்பாதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி ஒரு கோலைப் பெற்று வெற்றி வாய்ப்பை எதிரணிக்கு வழங்காது ஆட்டத்தைச் சமப்படுத்திக் கொண்ட நிலையில் ஆட்டம் நிறைவுபெற்றது.

வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு அடிகளை சரியாகப் பயன்படுத்திய உடுவில் மகளிர் கல்லூரி மேலதிகமாக ஒரு கோலைப் பெற்று வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இதேவேளை மூன்றாம் இடத்திற்கான போட்டியில் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக் கொண்டதில் மல்லாகம் குளமங்கா றோ.க.த.க. பாடசாலை 1:0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வெற்றி கொண்டு மாவட்ட ரீதியில் 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக் தமிழ்க் கலவன் பாடசாலை என்பன முதல் தடவையாக ஹொக்கிப் போட்டியில் இம்முறையே கலந்துகொண்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (4-86)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## சண்டிலிப்பாய் பிரதேச செயலக பெண்களுக்கான குழுநிலைப் போட்டிகளில் வெற்றியீட்டிய கழகங்கள்

வலி.வடக்கு,ஜூன்27

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான குழுநிலைப் போட்டிகளில் வெற்றியீட்டிய கழகங்களின் விவரங்கள் வருமாறு:

*வலைப்பந்தாட்டம்:* சண்டிலிப்பாய் இந்து வி.க., மாதகல் சென்.மேரிஸ் வி.க., சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் வி.க.

*கரப்பந்தாட்டம்:* பண்டத்தரிப்பு ஐக்கிய வி.க., சில்லாலை சிம்பொனி வி.க., ஆனைக்கோட்டை கலை ஒளி வி.க.

*துடுப்பாட்டம்:* பண்டத்தரிப்பு ஐக்கிய வி.க., ஆனைக்கோட்டை கலை ஒளி வி.க., விளான் ஸ்ரீ அம்பாள் வி.க.

*எல்லே:* பண்டத்தரிப்பு ஐக்கிய வி.க., விளான் ஸ்ரீ அம்பாள் வி.க.

*உதைபந்தாட்டம்:* ஆனைக்கோட்டை கலை ஒளி வி.க., விளான் ஸ்ரீ அம்பாள் வி.க.

தடகளப் போட்டிகளில் பண்டத்தரிப்பு ஐக்கிய வி.க. 77 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் இளவாலை யங் ஹென்றீஸ விளையாட்டுக் கழகம் 40 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் ஆனைக்கோட்டை கலை ஒளி விளையாட்டுக்கழகம் 13 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

சிறந்த தடகள வீராங்கனையாக 200 மீற்றர் தூரத்தை 31.2 செக்கனில் நிறைவு செய்தும் முப்பாய்ச்சலில் 9 மீற்றர் தூரத்தைப் பாய்ந்தும் சாதனை புரிந்த பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சர்மிலா தெரிவுசெய்யப் பட்டுள்ளார். (4-86)

## 'ருவெனரி-20' கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டக் கிரிக்கெட் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் கழகங்களுக்கிடையே 'ருவென்ரி - 20' கிரிக்கெட் சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் எனவும் விண்ணப்பங்களைக் கனகரத்தினம் விளையாட்டுப் பொறுப்பாசிரியரிடம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## முன்பள்ளிச் சிறுவர்களின் விளையாட்டு விழா

சண்டிலிப்பாய் மேற்கு மணிமேகன் சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இ.நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் க.சதீஸ்குமாரும் கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளிகளின் உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.குகனேசன், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தசர்மா உட்பட மற்றும் பலரும் கலந்துகொள்ளவுள்ளார்கள். (50-86)

## பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் பன்னாலை கணேசன் இளைஞர் கழகம் சம்பியன்

வலி.வடக்கு,ஜூன்27

தெல்லிப்பழை பிரதேச இளைஞர் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் பன்னாலை கணேசன் இளைஞர் கழகம் சம்பியனாகியது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் பன்னாலை கணேசன் இளைஞர் கழகமும் அளவெட்டி இளம்கதிர் இளைஞர் கழகமும் மோதிக்கொண்டன.

முதல் இரண்டு நேர் சுற்றுக்களையும் பன்னாலை கணேசன் இளைஞர் கழகம் 25:22, 25:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் அளவெட்டி இளம்கதிர் இளைஞர் கழகத்தை வெற்றிகொண்டு மாவட்ட மட்டத்தில் விளையாடவும் தகுதி பெற்றுள்ளது. (4-86)

# உரிய விதிமுறைகளைச் சரியாகப் பின்பற்றி விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றனவா?

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகள், கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு முடிவடைந்துவிட்டன. இப்போட்டிகள் சாதனைகளும் வேதனைகளும் நிறைந்த நிலையிலேயே முடிவடைந்துள்ளன.

இந்தப் போட்டிகள் உரிய விதிமுறைகளுக்கு ஏற்ப நடத்தப்பட்டதா, போட்டிகளில் உரிய வீரர்கள், வீராங்கனைகள் கலந்துகொண்டார்களா, உரிய அலுவலர்கள் மத்தியஸ்தம் வகித்தார்களா எனப்

## வீரர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிக அவசியம்

பல்வேறு கேள்விகள் இப்போது எழுந்து கொண்டிருக்கின்றன.

இந்தப் போட்டிகளின்போது கருத்தில் கொள்ளப்படாததுடன் போட்டியாளர்கள் பங்குபற்றும் மைதானங்களும் சீராக அமைக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இங்கு குறிப்பிடப்படும் விடயங்கள் அனைத்துப் போட்டிகளில் பங்குபற்றிய வீரர்களினதும், பொறுப்பாசிரியர்களினதும் ஏனையவர்களினதும் கருத்து வெளிப்பாடே.

போட்டிகளில் கலந்துகொள்ள வருகின்ற ஒவ்வொரு வீரரும் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்காகவே மைதானத்தில் இறங்குகின்றார்கள். இதற்கு வழி திறக்கவேண்டும். வசதி செய்யவேண்டும். இதுவே எமது அடிப்படை எண்ணமும் சிந்தனையாகவும் இருக்கவேண்டும். இதற்கு அவசரமும் அசட்டையீனங்களும் தடையாக இருக்கக்கூடாது.

இந்தவகையில்தான் மாவட்டப் போட்டிகள் சில நடைபெற்று முடிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியொரு பாடசாலை பல்வேறு போட்டிகளையும் தனது மட்டுப்படுத்திய வள ஆளணியினருடன் நடத்திமுடிக்க இயலுமானால் பல்வேறு வள ஆளணிகளுடன் இடம்பெறும் போட்டிகள் சிறப்பாகவும் யாருக்கும் பாதிப்பு இன்றியும் நடக்கவேண்டியது முக்கியமல்லவா.

குறிப்பாக யாழ்.குடாநாட்டில் விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட மட்டத்தில் நடைபெறும்போது [illegible] னங்கள் ரீதியாக பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. இவைகள் தீர்க்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். உரிய வசதிகள் இல்லாத நிலையிலும் போட்டிகளை நடத்திமுடிப்பது உரிய அதிகாரிகளின் திறமையும் ஆற்றலும் என்பதையும் மறுக்கமுடியாது.

இதற்காகப் போட்டிகளில் நடுநிலைமை, சம சந்தர்ப்பம் போன்ற விடயங்களில் குளறுபடிகள் ஏற்பட வாய்ப்பளிக்கக்கூடாது. தற்போது நடந்துமுடிந்த போட்டிகளின்போது சில குளறுபடிகள் நடைபெற்றதாக விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களிடமும் வீரர்களிடமும் இருந்து கருத்துகள் வெளியாகியுள்ளன.

மறுபுறத்தே கழகங்களிடமும் இத்தகைய விமர்சனங்கள் எழுந்துள்ளமையையும் குறிப்பிடவேண்டியதாகும். இதனையிட்டு விளையாட்டு ஆர்வலர்களிடம் கவலையும் அதிருப்தியும் காணப்படுகின்றது.

குறிப்பாக தட நிகழ்வின்போது ஒரு நிகழ்வு இடம்பெற்றுக்கொண்டு இருக்கும்போது மேலும் ஒரு நிகழ்வை அதே இடத்தில் நடத்துவதும், போட்டிகளில் வழங்கப்படும் தீர்ப்புக்களை விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்ப மாற்றியமைப்பது போன்ற நிகழ்வுகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

இத்தகைய சம்பவங்கள் பாடசாலைப் போட்டிகளில் இடம்பெறுவதாகப் பரவலான குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன.

இது ஒரு கல்விச் சமூகத்திற்கு உகந்ததும் அல்ல. எதிர்காலச் சமூகத்தின் வளர்ச்சிக்கு ஏற்றதும் அல்ல. இது நற்பிரஜையாக வளரவேண்டிய மாணவர்களை விரக்தி நிலைக்கு இட்டுச்செல்வதுடன் எதிர்காலத்தில் அவர்களை வன்முறையாளர்களாக வளர்த்தெடுக்கும் ஒரு செயற்பாடே.

இத்தகைய நிலைமைகள் விளையாட்டுப் போட்டிகள் முதல் அனைத்துப் போட்டிகளிலும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் போட்டி அமைப்பாளர்களுக்கும் அதனுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உரியதாகும்.

எனவே, இதுவரை நடைபெற்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்கவேண்டும். போட்டிகள் போட்டியாக இருக்கவேண்டுமே தவிர பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகவோ, மனம் நோகடிக்க செய்யும் நிகழ்வுகளாகவோ இருக்கக் கூடாது என்பதே அனைவரதும் உண்மையான விருப்பமும் எதிர்ப்பார்ப்பும் ஆகும்.

விண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதிவதனி சிற்பாலயம்

கருங்கற்சிலை, ஐம்பொன்சிலை,
யந்திரத்தகடு, வெண்கலமணிகலசம்,
கொடிகம்பகவசம், வெள்ளி அங்கிகள்,
திருவாசி, ஆசனத்தகடு, வெள்ளிக் கிரீடம்,
பிளேட்டிங் அன்ட் பொலிசிங்.
என்பன
உரிய நேரத்தில் செய்து தரப்படும்.

இல 34. பிறவுன்,யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் இயங்கி வந்த தொழிலகம் தற்போது கீழ்காணும் விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

உரிமையாளர்: சு.சரவணபவன்
தொடர்புகளுக்கு: 0774112049

14.B.A. தம்பி லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.


## கிழங்கு மூடைகளில் வந்த போதைப் பொருள் மீட்பு

### ஒரு கோடி 2 லட்சம் ரூபா பெறுமதியாம்

கொழும்பு, ஜூன் 27

பாகிஸ்தானிலிருந்து கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த 'கோரியா' என்ற கொள்கலன் கப்பலிலிருந்து ஒரு கோடி 25 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சுங்கத் திணைக்கள அதிகாரிகள் இதனைக் கைப்பற்றியுள்ளனர் எனச் சுங்க அதிகாரி தயாவன்ஸ செனவிரத்ன தெரிவித்தார்.

35 ஆயிரம் கிலோ எடை கொண்ட ஆயிரத்துத் 900 கிழங்கு மூடைகளில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இந்த ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. சுமார் 240 கிழங்குகளில் 2 கிலோ நிறையுடைய போதைப்பொருட்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

''சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினத்தன்று (26.06.2009) இவ்வாறான ஹெரோயின் போதைப் பொருளைச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியமை மகிழ்ச்சி அளிக்கின்றது'' என சுங்க அதிகாரி தயாவன்ஸ செனவிரத்ன மேலும் தெரிவித்தார். (சி)


**ENGLISH & SINHALA Personal Classes**

இரு மொழிகளும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்கள், அரச, வங்கி, மற்றும் தனியார் நிறுவன சேவையாளர் உட்பட எவ்வயதினரும் எத்திகதியிலும் இணைந்து கொள்ளலாம்.

வகுப்பு நேரங்கள் (வெள்ளி தவிர)
மு.ப. 8.30 - 11.30
பி.ப. 2.45 - 5.30 + 6.00 - 7.00

ஆய்வுக் கட்டுரைகள் சம்பந்தமான பிரத்தியேக மொழி பெயர்ப்பு வேலைகள் மற்றும் கடிதங்கள் (மூன்று மொழிகளிலும்) செய்து தரப்படும்.

**T.SAGATHEVAN,** B.A.London.
*Trilingual Tutor/Translator(PVT)*
*46, Pirappankulam Lane,*
*Vannarpannai, Jaffna.*
T.P: 2223520/077 8210178

**FOR SALE**

NEW DESK TOP DIGITAL BLOOD PRESSURE METER.
BLOOD GLUCOSE METER.
TWO PORTABLE ENGLISH TYPE WRITERS.

Contact 0773707631

**விற்பனைக்கு**

பெருந் தொகையான பாவித்த உள்ளூர், வெளியூர் முத்திரைகள், முதல்நாள் கடித உறைகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: க.அம்பலவாணர்,
அற்கின்சன் வீதி, வட்டு. தென் மேற்கு, வட்டுக்கோட்டை.

**ஒத்துமாறல்**

புத்தளம் பாடசாலை ஒன்றில் ஆரம்பப் பிரிவு ஆசிரியை யாழ்.மாவட்டப் பாடசாலை ஒன்றிற்கு ஒத்துமாற விரும்புகின்றார்.
தொடர்பு:- 0775339926


## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு அபராதம்

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த லொறியின் சாரதிக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான் வாகனச் சாரதிக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 10 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டு மணலைப் பறிமுதல் செய்யுமாறு பொலிஸாரைப் பணித்தார்.

(50-207)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 ★ 02 ★ 1926 | 22 ★ 06 ★ 2004 |

அமரர்
**ஞானமூர்த்தி ஐயாத்தம்பி**

திதி: ஆனிப்பூர்வ பஞ்சமி (27.06.2009)

அறிவின் சிகரமாய் பண்பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய் நன்னெறி தவறாது வாழ்ந்து
எமக்கு வாழ வழிகாட்டிய எம் அன்புத் தெய்வமே
ஆண்டுகள் ஐந்து சென்றாலும் ஆறாது எம் துயரம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (86544)
யோகேஸ்வரி (மகள்),
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
09 . 09 . 1944

மறைவு
29 . 05 . 2008

திருமதி
**வள்ளிப்பிள்ளை வேல்முருகு**

திதி: அபரபக்க தசமி (19.05.2009)

பாசமுள்ள ஐயாவுக்கு துணையாய் கூடிசென்றாயோ!
பாவிகள் நாங்கள் பரிதவித்துவிட்டோம்.
மறுபிறப்பென்பது மானுட உண்மையென்று
மறுபடியும் வந்து பிறந்து விட்டாய் எங்களுடன்.

*உன் பிரிவால் வாடும்:*
மச்சாள், பிள்ளைகள்,
மருமக்கள், பேரர்.

கட்டுக்கொம்பரை,
அல்வாய் கிழக்கு,அல்வாய்.

## மேம்பாட்டு உதவி

சித்தங்கேணி, ஜூன் 27

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டின்கீழ் உள்ள குடும்பங்களுக்கு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கிறிஸ்தவ சிறுவர் நிதியத்தால் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிணறு அமைப்பு கால்நடை வளர்ப்பு, சேதனப் பசளைத் தோட்டம் அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.(203-112)

## நடமாடும் சேவை

கெருடாவில், ஜூன் 27

வல்வெட்டித்துறை நகரசபையால் கெருடாவிலில் நடமாடும் சேவை ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இதில் ஆதனவரி அறவிடல் பற்றுச்சீட்டு வழங்கல், ஆதன உரிமை மாற்றம், கட்டட அமைப்பு விண்ணப்பங்கள் ஏற்றல், சைக்கிள் உரிமம் வழங்கல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

(203-253)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி குமாரசாமி அன்னலட்சுமி**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04.06.1948 | 07.07.2008 |

பாசத்தின் உறைவிடமே
குடும்ப ஒளி விளக்கே
விண்ணக வாழ்விற்கு
விரைந்திட்ட வித்தே
மண்ணில் எம்மையெல்லாம்
மறந்தது ஏனோ
சென்று விட்டாயோ

எண்ணி நாம் கதறுகின்றோம்
கண்ணீர் பெருக
இனி எப்போது காண்போம்
இனிய உம் வதனமதை
இறைவன் பாதமதில்
இளைப்பாறச் சென்று விட்டீர்
என்றே எம்மைத் தேற்றுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாவடி வடக்கு,
கொக்குவில்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்27

வரணி வடக்கு விவசாய சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்று அன்றைய தினம் புதிய நிர்வாகத்தெரிவு பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சு.ஜெகதீஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக மு.தனபாலசிங்கம், உபதலைவராக வி.பரமு, செயலாளராக க.தியாகராசா, உபசெயலாளராக சி.கணேசலிங்கம், பொருளாளராக வே.தியாகராஜா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் மூன்று பேர்கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (9)

* * *

கரவெட்டி,ஜூன்27

வல்வை அ.மி.த.க. பாடசாலை பழைய மாணவ சங்கத்திற்கு 2009ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக பூ.அகமணிதேவர், உபதலைவராக இ.யோகச்சந்திரன், செயலாளராக அ.மனோகரன், உபசெயலாளராக ச.தர்சினி, பொருளாளராக கி.நடராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (9-70)

* * *

நாவற்குழி,ஜூன்27

கைதடி வர்த்தகச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த 10ஆம் திகதி புதன்கிழமை 3 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் ச.ஞானலிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்திலே இடம்பெற்றது.

இவ்வாண்டுக்கான தலைவராக இ.குழந்தைவடிவேல், செயலாளராக க.சசிகுமார், பொருளாளராக செ.தனபாலசிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் 11பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (9-288)

# மக்கள் முகம்

தென்மராட்சி கல்வி வலயத்தின் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலராக மீசாலை வீரசிங்கம் ம.வி. அதிபர் கு.சிவானந்தம் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கோட்டக்கல்வி அலுவலராகக் கடமையாற்றிய நா.சத்தியநாதன் ஓய்வுபெற்றுள்ளதையடுத்து உடனடியாக இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளராக க.சிவகோசரியார் மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வலயத்தின் உடற்கல்விப் பிரிவு ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (9 -207)

* * *



யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரால் நடத்தப்பட்ட 2009ஆம் ஆண்டுக்கான சைவசமய அறிவுப்போட்டியில் வல்வை சிதம்பரக்கல்லூரி மாணவி தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

மேற்படி போட்டிகள் பாடசாலை மட்டங்களுக்கிடையே நடத்தப்பட்டதில் வல்வை சிதம்பரக்கல்லூரி க.பொ.த. உயர்தர கலைப் பிரிவு மாணவியான நிரூபனா தேவதாஸ் என்பவரே முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். (9-70)

* * *

வடமராட்சிக் கல்வி வலய முறைசாராக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராக திருமதி வே.இராசகுமாரன் வடக்கு மாகாணக்கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இவர் வடமராட்சிக் கல்வி வலய வாழ்க்கைத்திறன் பாட ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி வந்தார். (9-236)

# புத்தக சாலை

## சிறுவர் பொது அறிவு



புதிய பாடத்திட்டத்திற்கமைவாக புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டி நூலாக ''சிறுவர் பொது அறிவு'' எனும் நூலை வேதநாயகம் தபேந்திரன் என்பவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

புதிய பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எமது நல்வாழ்வு, விளையாட்டுக்களின் வகைகள் என்பனவற்றுடன் உலக நாடுகளும் அவற்றின் தேசியக் கொடிகளும் எனப் பல்வேறு பொது அறிவு அம்சங்களைத் தாங்கிய வண்ணம் ''சிறுவர் பொது அறிவு'' நூல் வெளிவந்துள்ளது.

1998இல் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களில் மாணவர்கள் மத்தியில் பொதுஅறிவு தொடர்பான குறைபாடு உணரப்பட்டு சில முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையிலும் க.பொ.த. (உ/த) பரீட்சையிலும் மாணவர்களின் பொது அறிவையும் மதிப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தவகையில் இந்நூல் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் மனதைக் கவரும் வகையில் மொழி நடையும் விளக்கப் படங்களுடனும் வெளிவருவது பாராட்டுதற்குரியது என்று வடக்கு - கிழக்கு ஓய்வுபெற்ற மாகாணக் கல்விப்பணிப்பாளர் இ.சிவானந்தம் தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

## இலக்கியப் பூக்கள்



புலம்பெயர் எழுத்தாளரான முல்லை அமுதனின் ஈழத்தில் அமரத்துவமடைந்த எழுத்தாளர்கள் பற்றியதான கட்டுரைகளின் தொகுப்பாக ''இலக்கியப் பூக்கள்'' நூல் வெளிவந்துள்ளது.

சங்க காலத்தைச் சேர்ந்தவரான ஈழத்துப் பூதந்தேவனார் தொடக்கம் 2007ஆம் ஆண்டு மரணித்த சந்திரபோஸ் வரை 44 ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் வரலாறுகள் கட்டுரை வடிவில் இடம்பெற்றுள்ளன. இந்தக் கட்டுரைகளை முல்லை அமுதன் உட்பட 32 ஈழத்து எழுத்தாளர்கள் எழுதியுள்ளனர்.

தமிழ்ப்புலவர்களின் புகைப்படங்கள் இடம்பெறுவதனாலும் பல்வேறு எழுத்தாளர்களின் கட்டுரைகளின் தொகுப்பாக இருப்பதனாலும் இந்நூல் ஈழத்துப் புலவர் வரலாறுகளிலிருந்து வேறுபடுகின்றது. ஈழத்திருநாட்டில் இலக்கியப் பணிபுரிந்த புலவர்களின் வரலாறுகளை அறிந்துகொள்ள உதவும் இந்நூல் தமிழர்கள் ஒவ்வொருவரினதும் வீட்டிலே இருக்கவேண்டிய அரும்பெரும் சொத்தாகும்.

ஈழத்துப் புலவர்களான ம.க.வேற்பிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, இரசிகமணி கனக.செந்திநாதன், பேராசிரியர் கைலாசபாதி, அ.ந.கந்தசாமி மற்றும் மு.தளையசிங்கம் ஆகியோர் உட்பட பல புலவர்களின் வரலாற்றுப் பொக்கிஷங்கள் இலக்கியப் பூக்களாக மணம் வீசுகின்றன.

யாழ்ப்பாணத்தின் கல்வியங்காட்டைச் சேர்ந்த முல்லை அமுதன் புலம்பெயர்ந்து இங்கிலாந்தில் வசித்து வருபவர். 1981இல் வெளிவந்த ''நித்திய கல்யாணி'' என்ற கவிதைத் தொகுப்புடன் ஆரம்பித்து இன்றுவரை 12 நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இனியாவது இம்மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படுவார்களா?

கடந்த பத்து ஆண்டுகளாக அகதிவாழ்விலே பல துன்ப, துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் தென்மராட்சி தெற்கு தனங்களப்பு, மறவன்புலோ மக்கள்!

சுமார் அறுநூறு குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரம் மக்கள் இந்த ஆண்டு, அடுத்த ஆண்டு எனக் காலத்தை எண்ணிக் கவலையுடன் காத்திருந்தும் - இன்னும் அவர்கள் அகதிவாழ்வு- அகலக் காலங் கனியவில்லையே எனக் கடவுளை நொந்து மனம் கல்லாய்ப் போனார்கள் இவர்கள்.

1999ஆம் ஆண்டு மார்கழி மாதம் தனங்களப்பு, மறவன்புலோப் பகுதியில் இருந்து வெறுங்கையுடன் வீட்டைவிட்டு ஓடிய இம் மக்களில் பலரும் பல இடங்களிலும் துன்ப, துயரங்களுடனே இன்றும் வாழ்கிறார்கள்.

அவர்களின் சொத்துக்களான ஐந்தாயிரம் ஏக்கர் நெல்வயல்கள், பனை, தென்னந் தோப்புக்கள், கால்நடைகள் யாவும் பயன் அற்றுப் பாழாய்ப் போய்க் கிடக்கின்றன.

யாழ்.குடாநாட்டின் அரையாண்டுக்கான அரிசித் தேவையைப் பூர்த்திசெய்தது எனப் பெருமையுடன் கூறப்பட்ட தென்மராட்சி தனங்களப்பு வயல்வெளிகள் பத்து ஆண்டுகள் செய்கை பண்ணப்படாமை தானோ இன்று அரிசி விலை உயரக் காரணம் எனவும் கூறப்படுகையில் இந்நிலங்கள் தன்மை குன்றிச் சவர் நிலங்களாக இன்று மாறியுள்ளன.

## மக்கள் மன்றம்

தனங்களப்பில் 170 குடும்பங்களும், மறவன்புலோவில் 350 குடும்பங்களும் , கைதடி - நாவற்குழியில் இன்றும் ஐம்பது குடும்பங்களும், யாம் எப்போ மீளக்குடியேற அனுமதிக்கப்படுவோம் என ஆவலுடன் காத்திருக்கின்றார்கள்.

அவர்கள் விட்டுச் சென்ற கால்நடைகள் பல்கிப் பெருகி இப்பரந்த நிலப்பரப்பில் ''மிதிவெடிகள் இங்கு இல்லவே இல்லை- எம் எசமான்களை இங்கு வரவிடுங்கள்'' எனக் கூறுவது போலச் சுதந்திரமாக நடமாடி அலைந்து அவை இங்கு வாழ்ந்து வருகின்றன.

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை, தனங்களப்பு அ.த.க. பாடசாலை ஆகிய பழம்பெரும் பாடசாலைகளும், முப்பதிற்கும் மேற்பட்ட சைவ ஆலயங்களும், சமூக நிறுவனங்களும் இடிபாடுகளுடன் கல் குவியலாகக் காட்சி தருவதை சாவகச்சேரி தெற்கு எல்லையில் நின்று பார்த்து உணரலாம்.

அரசியல் தலைவர்களிடமும், அரச அதிகாரிகளிடமும் இப்பகுதி மீள்குடியேற்றம், விவசாயச் செய்கை குறித்துப் பலமுறை இம்மக்களால் கோரப்பட்டு வருகிறபோதிலும் இன்னமும் அதற்குரிய காலம் வரவில்லையே என ஏங்குகிறார்கள் இவர்கள்.

இனியாவது இம்மக்கள் மீளக் குடியேறி தம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு மகிழ்ச்சியுடன் வாழ வழி பிறக்க இறைவனை வேண்டுவோமாக.

**மாணிக்க லீலாவிநோதன்.**

# சாயி பக்தராகவிருந்து மக்கள் சேவை புரிந்த பெரியார் சிவஞானம்



*சிவஞானம் ஐயா 1921ஆம் ஆண்டு உரும்பிராயில் பிறந்தார். இளமையில் கல்வியுடன் விளையாட்டிலும் வீரனாக வளர்ந்தார். உரும்பிராய் இந்துக்கல்லூரி, சென்.ஜோன்ஸ் ஆகிய பாடசாலைகளில் பயின்று யாழ்ப்பாணக் கல்லூரியில் தமது உயர்கல்வியை முடித்தார்.*

*முதலில் கொழும்பு கோட்டே ஆனந்தா சாஸ்திர என்ற புகழ்பெற்ற கல்லூரியில் 1943ஆம் ஆண்டு ஆசிரியராகத் தொழில்புரிந்தார். பின்னர் உதவி அரச அதிபர், மேலதிக அரச அதிபர், அரச அதிபர் போன்ற உயர் பதவிகளை வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் வகித்தார்*

*1979இல் சேவையிலிருந்து இளைப்பாறிய பின், பொதுத் தொண்டாக, யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் நிறைவேற்றுச் சபைப் பணிப்பாளராக 1985 வரை செயற்பட்டார்.*

*பகவான் பாபாவை யாழ்ப்பாணத்திலிருந்தவர்களுக்கு 1966ஆம் ஆண்டிலேயே கூடுதலாக அறியமுடிந்தது. இந்தியாவிலிருந்து வரும் ''இலஸ்ரேட் வீக்லி ஒப் இந்தியா'' என்ற பத்திரிகையில் பகவான் பாபாவின் வாழ்க்கை வரலாறு வெளிவந்தது. அப்போது யோகர் சுவாமிகளின் அன்பர்களான சாயிராம் கந்தசாமி ஐயா, வேதவிற்பன்னர் இராசதுரை ஐயா போன்றோருடன் சிவஞானம் ஐயாவும் சென்று பகவானை முதன்முதலில் தரிசித்தனர். அப்போது சாயிராம் கந்தசாமி ஐயா பகவான் பாபாவிடம் உங்களைப் பற்றி 1966இற்கு முன்னர் யாழ்ப்பாணத்தவர்களால் அறிய முடியவில்லையே எனக் கேட்க, அதற்குப் பகவான் பாபா ''யாழ்ப்பாணத்தில் மக்களை ஒரு பெரிய மகான் வழி நடத்திக் கொண்டிருந்ததால் எனக்கு அப்போது ஒரு தேவையும் இருக்கவில்லை'' என்று பதிலளித்தார். பகவான் குறிப்பிட்ட மகான் யோகர்சுவாமி ஆவார்.*

*1967ஆம் ஆண்டு திருநெல்வேலியில் சத்தியசாயி நிலையத்தை அமைக்க சிவஞானம் ஐயா ஊன்று கோலாயிருந்தார்.*

## மக்கள் மாண்பு

*அரச சேவையில் கடமையாற்றிய வேளையில் பாமரமக்கள், சக உத்தியோகத்தர்கள், உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெற்றார். ஸ்ரீலங்கா நிர்வாகப் போட்டிப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்து அவர் வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் மிகவும் நெருக்கடியான காலகட்டங்களில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றி மூவின மக்களின் உள்ளங்களில் இடம்பிடித்தார். குறிப்பாக 1971 சேகுவேரா புரட்சிக் காலத்திலும் 1977 இனக்கலவரத்திலும் வவுனியாவில் பல சிரமங்களுக்கு மத்தியில் கடமையை நேர்மையாகச் செய்து புகழ்பெற்றார். தீவகத்தில் கடமையாற்றியபோது நயினை நாகபூசணி அம்மன் தர்மகர்த்தா சபையின் தலைவராக பலகாலம் பணியாற்றினார். சேர் பொன்.இராமநாதன் நிதியத்தின் செயலாளராக ஐந்து ஆண்டுகள் கடமையாற்றினார். இப்படியாக ஆத்மீகத் தொண்டுகளில் ஈடுபட்டவேளை அப்போதைய அரச அதிபர் ஸ்ரீ காந்தாவுடன் கொண்ட நட்பால் யோகர்சுவாமிகள்பால் கவரப்பட்டார். யோகர் சுவாமிகளின் போதனைகள் இவரை ஆத்மீகத்தில் ஈடுபட உதவியாயிற்று. கிளிநொச்சிப் பகுதிக்குக் கடமைக்குச் செல்லும்வேளைகளில் யோகர் சுவாமிகளையும் தமது வாகனத்தில் சிலவேளைகளில் ஏற்றிச்செல்லும் பேறையும் பெற்றிருந்தார். யோகர் சுவாமிகளின் ஆசீர்வாதத்தைப் பெற்று அனுபவித்தார்.*

*பகவான் சத்தியசாயி பாபா அமைப்பின் இலங்கைக் கிளையின் இணைப்பாளராகச் சேவை செய்தது இவரது வாழ்வின் பொற்காலமாகும். அப்போது பகவான் பாபாவை நேரடியாகச் சந்தித்து உரையாடி பல்வேறு சேவைத் திட்டங்களை இலங்கையில் அறிமுகப்படுத்தினார். தமக்குப் பகவான் பாபாவால் சிருஷ்டித்து வழங்கப்பெற்ற மோதிரத்தைக் கையில் எப்போதும் அணிந்திருந்தார். தமது முதுமை காரணமாக பகவானின் ஆசியுடன் தமது பொறுப்புக்களை வேறொரு சாயி அன்பருக்குக் கையளித்து இறுதிவரை ஆலோசகராகக் கடமையாற்றினார்.*

*2000த்தின் தொடக்க ஆண்டுகளில் சிவஞானம் ஐயா முன்னிலையில் திருநெல்வேலி சாயி சமித்தியில் போயா தினங்களில் வேத விற்பன்னர் இராசதுரை ஐயா வேத மந்திரங்கள் ஓத சாயிராம் கந்தசாமி ஐயா அக்னிஹோமம் வளர்த்து பாத பூசை செய்வதும், பண்ணிசை சிவஞானம் ஐயா யோகாசுவாமிகளின் நற்சிந்தனை, சாயி பஜனை பாடுவதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.*

*'எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்' என்ற யோக முனியின் அருள்வாக்குக்கேற்ப சிவஞானம் ஐயாவும் பகவானுடன் இரண்டறக் கலந்துவிட்டார். இராமபிரானை வணங்க எப்படி அனுமான் எங்கள் மனக்கண்ணில் தோன்றுவாரோ அதேபோல் பகவான் பாபாவை வணங்கும்போது சிவஞானம் ஐயாவும் எங்கள் மனக்கண்களில் தோன்றுவார்.*

**ம.சிவயோகசுந்தரம்** (நல்லூரான் சிவா),
பொஸ்ரன், அமெரிக்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியத் துறையின் வளர்ச்சிக்கு பண்டிதமணி ஆற்றிய பங்களிப்பு

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் பிறந்ததினம் ஜூன் 27 இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது சிந்தனைகள் புத்தம் புதியவை; சிந்திக்க வைப்பவை; அர்த்தம் நிறைந்தவை; ஆத்மசாந்தி அளிப்பவை.

முப்பது ஆண்டுகள் திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ் மழை பொழிந்த பண்டிதமணி ஐயா, நாவலர் பெருமானது சிந்தனைகளை நிறைவு செய்யத் தோன்றியவர். அவர் 1899ஆம் ஆண்டு ஆனிமாதம் 27ஆம் திகதி மட்டுவிற்பதியில் தோன்றினார். ஐந்தாம் வகுப்பு வரை முறை சார்ந்த கல்வி கற்றவர். இடையிற் சில வருடங்கள் கல்வியிலே தடை ஏற்பட்டாலும் பதினெட்டாவது வயதில் மீண்டும் நாவலர் பெருமானின் வண்ணார் பண்ணைக் காவிய பாடசாலையிற் கல்வி கற்றார். அவர் புகழ்பூத்த அறிஞர்கள் பலரிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களை வரன் முறையாகக் கற்றுத் தேறியவர்.

பண்டிதமணி அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சைக்குத் தோற்றி முதற் பிரிவிற் சித்தியடைந்து தங்கப் பதக்கம் பரிசாகப் பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றார்.

சைவப் பிள்ளைகளை உருவாக்க சைவப் பாடசாலைகள் அவசியமெனவும் சைவப் பாடசாலைகளை உருவாக்க சைவ சமய அறிவு கொண்ட ஆசிரியர்கள் தேவையெனவும் அத்தகையோரை உருவாக்க வேண்டுமெனில் சைவஆசிரியர் பயிற்சிக் கலாசாலையொன்று வேண்டும் எனவும் உணர்ந்து சைவ விருத்திச் சங்க நிர்வாகி இராசரத்தினம் ஐயா அவர்கள் திருநெல்வேலியில் சைவஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை உருவாக்கினார். மௌனதவ முனிவராகிய பொ.கைலாசபதி, மயிலிட்டி சி. சுவாமிநாதன், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோர் உட்பட இன்னும் சில ஆசிரியர்களும் இணைந்து கற்பித்த சைவாசிரியர் கலாசாலையிற் பயிற்சிபெற்று வெளியேறிய சைவாசிரியர்கள் நாடெங்கிலும் பரந்து பணி புரியத் தொடங்கினர். இதனால் சைவமும் தமிழும் வளர்ச்சி கண்டன. ஆசிரியப் பணி சிறந்தது.

பண்டிதமணி அவர்கள் பிரமசரியம் கடைக்கொண்டொழுகிய பேராசான் ஆவார். பயிற்சிக் கலாசாலையில் கற்பித்தது மட்டுமல்லாது அந்த வளாகத்தில் ஒரு மும்மொழிக் காவிய பாடசாலையையும் உருவாக்கிப் பாலபண்டிதர், பண்டிதர் எனப்பலரை உருவாக்கினார். பண்டிதமணி அவர்களது கற்பித்தல் உத்தி தனித்துவமானது. அவரது பிரசங்க பாணியும் தனித்தன்மை கொண்டது. பண்டிதமணி பிரசங்கம் செய்யச் செல்கின்றார் என்றால் அவரது பிரசங்கத்தைக் கேட்க அவர்பின்னே ஒரு மாணவர் பரிவாரமே செல்லுமளவுக்கு அவரது பிரசங்கங்கள் சிறந்து விளங்கின.

பண்டிதமணி அவர்கள் தமது வாழ்வு முழுவதையும் தவப்பொழுதாகவே ஆக்கிக் கொண்டவர். தமிழ், சைவ சித்தாந்தம் ஆகியவற்றில் யார் சந்தேகம் கேட்கச் சென்றாலும் உடனுக்குடன் அவற்றைத் தீர்த்துவிடும் பெருந்தன்மையும் அறிவுத்திறனும் கொண்டிருந்தார். அவரிடம் பல்வேறு வகைப்பட்டவர்கள் பல்வேறு திக்குகளிலும் இருந்து தமது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள, ஆலோசனை பெற்றுக் கொள்ளவென வருவதுண்டு. அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைப் புரிந்து அனுப்பும் உயரிய பண்பு அவரிடம் இருந்தது. விஞ்ஞானி



மட்டுமன்றி மெய்ஞ்ஞானியும், இலக்கிய ஞானியும் ஆய்வு தான் செய்கின்றனர். விஞ்ஞானியின் ஆய்வு ஒருவழி. மெய்ஞ்ஞானியின் ஆய்வு மற்றொருவழி. 'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்' இந்த நோக்கை நிறைவு செய்வது மெய்ஞ்ஞானியின் ஆய்வு. இத்தகைய ஆய்வை நடத்தி ஒவ்வொரு ஆசிரிய மாணவரையும் புடம் போட்டு, ஆசிரியப் பணி புரிய வழிகாட்டிய பண்டிதமணி ஐயாவும் அவரது தமிழ்ப் பணியும் தமிழ் கூறும் நல்லுலகம் உள்ளவரை தமிழ் மக்கள் டினங்களில் நின்று நிலை பெறும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது.

**பண்டிதை பொன்.பாக்கியம்,**
*தலைவர், பண்டிதமணி நூல்வெளியீட்டுச்சபை.*

# நவாலி விவசாய சம்மேளனம் இரு நிர்வாக அலகுகளாகப் பிரிகிறது

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலையத்தின் கீழ் 1997இல் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் நவாலி விவசாயிகள் சம்மேளனம்.

இச்சம்மேளனம் ஜே/134 நவாலி வடக்கு, ஜே/135 நவாலி கிழக்கு, ஜே/136 நவாலி தெற்கு ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டதாக-

நவாலி வடக்கு கிராம அலுவலர் அ.தனபாலரத்தினத்தின் பெருமுயற்சியினா லும் முன்னாள் உடுவில் பெரும்பாக அலுவலரும் தற்போதைய யாழ்.மாவட்ட தேர்தல் அதிகாரியுமான பொ.குகநாதனின் ஆர்வத்தினாலும் இச்சம்மேளனம் நானூறுக்கும் (400) மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு 1997இல் உருவாக்கப்பட்டது.

ஆனால் பரந்தளவிலான- பாரிய பிரதேசமும் மூன்று கிராம அலுவலர் பிரிவினையும் இணைத்து முழுச் சேவையினையும் விவசாயிகளுக்கு ஆற்ற நவாலி விவசாயிகள் சம்மேளனத்தினால் முடியாது போய் விட்டது.

இதனால் நவாலி விவசாயிகளுக்கான மண் எண்ணெய் ஒதுக்கீடு, விவசாய உர மானியம்,சுழற்சி முறையிலான வங்கிக் கடன், நீர்ப்பம்பிக் கடன், அரசின் மானிய ஒதுக்கீடுகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒதுக்கீடுகள் எனப் பலதும் மிகக் குறைந்தளவிலேயே வழங்கப்பட்டன.

**இரா.சுதா.**

இதனால் 400 விவசாய உறுப்பினர்களுக்கும் பங்கிடப்பட முடியாத பாரிய பிரச்சினை இங்கு 2004இல் இருந்து விவசாயிகள் மத்தியில் இருந்தது.

இந்நிலையில் 2005இல் நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தினால் விவசாயிகள் எதிர்நோக்கும் மேற்படி பிரச்சினை தொடர்பாக சண்டிலிப்பாய் முன்னாள் பிரதேச செயலரும் மேலதிக அரச அதிபருமான ரூபினி வரதலிங்கம், உடுவில் கமநல சேவைகள் நிலைய பெரும்பாக அலுவலர், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோரின் உடனடிக் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து முன்னாள் சண்டிலிப்பாய் பிரதேச செயலரும் தற்போதைய மேலதிக அரசாங்க அதிபருமான திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு இணங்க 3நிர்வாக அலகுகளாக (நவாலி வடக்கு- நவாலி தெற்கு- நவாலி கிழக்கு) பிரிக்குமாறு-

பெரும்பாக அலுவலரை பணித்திருந்ததுடன் அதற்கான கடிதங்களையும் உத்தியோகபூர்வமாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு எழுதியிருந்தார்.

இதனையடுத்து நவாலி விவசாயிகள் சம்மேளனம் மூன்று அலகுகளாகப் பிரிப்பதற்கு ஏற்கனவே 4 பொதுக்கூட்டங்கள் கூட்டப்பட்டு முடிவுகள் எட்டப்படாத நிலையிலும், சம்மேளனங்கள் பிரிக்கப்படாத நிலையிலும் ஒத்திவைக்கப்பட்டன.

இந்நிலையில் இன்று சனிக்கிழமை நவாலி மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் புதிதாக இரு நிர்வாக சபைத் தெரிவுகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் நவாலி வடக்கு விவசாயிகள் சம்மேளனத்திற்கு என ஒரு தனி அலகு கொண்ட புதிய நிர்வாக சபையும்-

நவாலி கிழக்கு- நவாலி தெற்கு ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவும் சேர்ந்து இன்னுமொரு சம்மேளன நிர்வாக அலகுமாக இரு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்படவுள்ளன.

நவாலி நெல் உற்பத்தியில் (3கிராம அலுவலர் பிரிவிலும்) விளைச்சல் கூடிய பிரதேசம்.

இதனை விட பொன்னான்காணி, வல்லாரை, பசளி, கீரை மற்றும் கானல் பயிர் உற்பத்தியான எள், பயறு, கௌபி போன்றவற்றிலும் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாயில் நவாலி வடக்கு- தெற்குப் பிரதேசங்கள் சிறப்பாகச் செயற்படுகின்றன.

இவ்வாறு செயற்படுகின்ற விவசாயிகளின் முழுத் தேவையும் பூரணமாக நிறைவேறவேண்டுமாயின் சம்மேளனம் உடனடியாகப் பிரிக்கப்பட வேண்டும் என அனைவராலும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் நவாலியில் வேடுவண் கண்டி, நங்கன், அட்டகிரி, உலகி, கிராய் குளங்கள் உட்பட 13இற்கும் மேற்பட்ட குளங்கள் உள்ளன.

அதற்கு மேலாக நவாலி வடக்கில் கமநல சேவைகள் நிலையம் அமைந்துள்ளது.

இவ்வாறு பிரதேச வள்ர்ச்சிக்கும்- அபிவிருத்திக்குமான விவசாய கருப்பொருளாக நவாலி உள்ளது.

மேலும்- விவசாயத்தில் தன்னிறைவு அடைந்து தேசிய உற்பத்திக்கு பங்களிக்க வேண்டுமாயின் அதிகாரங்கள் குவிக்கப்பட்ட நிலையில் இல்லாது-

பகிரப்பட்ட அதிகாரங்கள் வழங்கி (Delegation Of Powers) சம்மேளனங்கள் செயற்பட்டால் தன்னிறைவு அடையும் என்பது உறுதி.

# இலங்கையில் பயங்கரவாத விதைகளை மீண்டும் விதைக்க சர்வதேச நாடுகள் முற்படுகின்றன

## விமல் வீரவன்ஸ எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 27

''பயங்கரவாதத்தின் விதைகளை மீண்டும் இந்தநாட்டில் விதைக்க சர்வதேச நாடுகள் முற்படுகின்றன''

-இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

அதேபோல அழிந்து போயுள்ள புலி இயக்கத்தின் அடுத்த தலைவராக வருவதற்கு புலிகள் இயக்கத்தின் சர்வதேச விவகார பொறுப்பாளர் கே.பி பத்மநாதன் முற்படுகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டு படைதலைமையக அதிகாரி சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புலிகள் முற்றாக அழிந்து விட்ட போதிலும் அவர்களின் நிழல் ஆங்காங்கே தென்படுகிறது இந்த நிழலை நிஜமாக்கி மீண்டும் இந்த நாட்டில் பயங்கரவாதத்தை விதைக்க சர்வதேச நாடுகள் முற்படுகின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்கள் வடக்கு, கிழக்கில் நுழைந்து இந்த வேலைகளில் ஈடுபட முற்படுகின்றன. புலிகள் சர்வதேச விவகாரப்பொறுப்பாளர் கே.பி. புலிகளின் தலைவராக வருவதற்கு முயற்சி செய்கின்றனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் இந்தியா சென்று வடக்கு- கிழக்கில் இராணுவ முகாம்கள் அமைப்பதைத் தடுக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். இதற்கு இந்தியா நல்ல பதில் ஒன்றை வழங்கியது.

இந்த நாட்டில் ஏனையபகுதிகளில் இருப்பதுபோல் வடக்கு, கிழக்கிலும் இருக்கவேண்டும் அப்போதுதான் பிரிவினை வாதம் மீண்டும் தலைதூக்காது.

அதேபோல் நாட்டை பிரிக்கும் அரசியல் கோட்பாடுகளையும் தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். (சி)



உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கத்தின் கோப்சிற்றியின் முதலாம் ஆண்டு பூர்த்தி நிகழ்வுகள் தலைவர் சி.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். சங்கத் தலைவரும் பொது[illegible] அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் [illegible] காணலாம். (253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் பண்ணிசையின் இன்றைய நிலை



[illegible]
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வெளிவாரி மாணவி (சங்கீதம்)

(இதன் முதற் பகுதி கடந்த வார உதயனில் வெளியாகியிருந்தது)

கொக்குவில் குமாரசாமிப் புல்வர், தமிழ்நாடு திருப்பனந்தாழ் ஆதீன இசைப்புலவர் கோ.சண்முக சுந்தரம் போன்றவர்களும், உரும்பிராயைச் சேர்ந்த பண்ணிசைவாணி தையல்நாயகி பரந்தாமர் என்பவரும் 1960ஆம் ஆண்டிலிருந்து 1985ஆம் ஆண்டு வரை பண் இசையை கட்டாய பாடமாக இசை மாணவர்களுக்கு போதித்து வந்தார்கள். இராமநாதன் நுண்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட போது 1992ஆம் ஆண்டு வரை பண்ணிசை கர்நாடக இசை பயிலும் மாணவர்களுக்கு நூறுவீத புள்ளிகளைக் கொண்ட ஒரு பாடமாக வளர்த்து எடுக்கப்பட்ட தனிச்சிறப்பு பண்ணிசைக்கு உரியதாகியது எனலாம். 1992இற்குப் பின்னர் பட்டத் துறை ஆக்கப்பட்டது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் குறிப்பாக சைவர்கள் பண்ணிசை வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்க வேண்டியவர்கள். தற்செருக்கால் வாளாவிருந்து விட்டனர்.

யாழ்ப்பாணம் உட்பட இலங்கையில் சுமார் 2400 சைவக் கோயில்கள் உள்ளன. இவற்றில் 400 கோயில்கள் பிரபல்யமானவை. இவற்றுள் சுமார் 50 கோயில்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. வடக்கே "நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயமும்", கிழக்கே "மண்டூர்க் கோயிலும்", தெற்கே "கதிர்காமமும்", மேற்கே " பொன்னம்பலவாணேஸ்வர ஆலயமும்" இவை உட்பட தேவார முதலிகளால் சிறப்புப் பெற்ற ஆலயங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், உருத்திரபுரிஸ்வரம் உட்பட புகழ் பூத்ததும் உலகப் பிரசித்தி பெற்ற சிவாலயங்களில் ஒன்று கூட பண்ணிசையை சிவ வழிபாட்டிற்கு உரியதாக தெரிவு செய்யப்படவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகின்றது. இதனால் தமிழ் மக்கள் சிவ அபராதத்திற்கு ஆளாகி நாடு, நகர், வீடு, வாழ்வு, தொழில், வளம் போன்றவற்றை எல்லாம் இழந்து வழி தெரியாது அபலைகளாக நிற்கின்றார்கள். இது சிவத் துரோகத்திற்கு கிடைத்த பரிசு ஆகும். சிவபூமியான ஈழத்தில் இந்த நிலை தோன்றியதற்கு நாமே காரணம் எனலாம்.

கடந்த பல வருடங்களாக யாழ்ப்பாணம் உட்பட ஈழத்தில் பெரும் மற்றும் சுமாராக வருமானம் படைத்த திருக்கோயில்கள் பல லட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுத் திருக்குடமுழுக்கு செய்யப்பட்டன. ஒவ்வொரு கோயிலும் ஒரு மாதத்திற் மேல் கிரியைகளும், வழிபாடுகள் ஆற்றப்பட்டு தொடராக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆலயங்களின் நிர்வாகிகள் யாவரும் ஒரு சதவீதத்தினர் கூட சிவ தோத்திரம் என சிறப்பிக்கப்படும் பண்ணிசையை அந்தந்த இடங்களில் ஓத, ஓதுவிக்க, கேட்க, கேட்பிக்க நினைத்தார்களா? இல்லை. அவர்களுடைய கனவுகள் எல்லாம் சிவதோத்திரத்திற்கு மாறான செயலாகன் காணப்படுவதால் இன்றைய தமிழ் சைவர்கள் எனச் சிறப்பிக்கப்படும் அனைவரும் முகவரி அற்ற அநாதைகளாகிவிட்டோம்.

[தொடரும்]

## வார வசந்தம்

# தேம்பி அழுகின்றன நூல்கள்



க.அருந்தகுமார்,
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத் தலைவர் சிதம்பரப்பிள்ளை ஐயா காலமாகிவிட்டார் என்றுசெய்தி என் காதை அடைந்தபோது நான் ஒரு நிமிடம் உறைந்துவிட்டேன்.

சென்ற புதன்கிழமை மற்றக்காலும் கழற்றப்பட்டு விட்டது என்று அறிந்து அவரை அனுமதித்திருந்த சென்றல் நேசிங் கோமில் அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன்.

அந்த நிலையிலும் "வாடாப்பா" என்று வாஞ்சையோடு அழைத்தார். அவரின் நிலை என் கண்களைக் கலங்கச் செய்தது.

'என்னடாப்பா' என்றார். அவர் தளர்ந்து போய்விட்டதை உணர்ந்தேன். கடைசியாய் தந்த புத்தகத்தின்ர 'பேமன்ற்' எல்லாம் எடுத்திட்டியோடா என்றார். கேசவன் ஓரளவுக்கு நெருங்கிப் பழகியவன் என்ற ரீதியில் அவர் அப்படிக் கேட்டது என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கவில்லை. ஏனெனில் அவர்தான் தலைவர், கடமைவீரர், அப்போது அவருக்கு நீரைப் பருக்கினார்கள். 'பிரக்கடித்தது' - நெஞ்சை நீவிவிட்டேன். 'காணுமடாப்பா' என்று கண்ணை மூடிக்கொண்டு சொன்னார்.

'வாழ்ந்தது போதும்' என்றுதான் சொன்னார் என்று எனக்கு அப்போது விளங்கவில்லை. இப்போது புரிகிறது.

* * *

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் தலைவராக இருக்கும்வரை இருந்தவர். 78 வயதிலும் நோயுற்றபோதிலும் தளராத தற்துணிவோடும் நம்பிக்கையோடும் நிறுவனத்தை நடத்திய நல்ல கூட்டுறவாளன். இலக்கிய ரீதியிலேயே அவரோடு நெருங்கிப் பழகியவன் என்ற ரீதியில் அத்துறை சார்ந்தே சில குறிப்புகளைக் குறிப்பிடலாமென்று எண்ணுகிறேன். பண்டிதமணியிடம் தமிழ் கற்றவர் என்ற ரீதியில் கணித ஆசிரியர் என்பதையும் தாண்டி அவரிடம் இலக்கிய தாகமும் - வாசிப்பு ஆர்வமும் கல்வி அபிவிருத்திச் சிந்தனைகளும் நிறைந்திருந்தன.

1986இல் சங்கத்தின் ஓர் அங்கமாக உருவாகிய கலாசார கூட்டுறவுப் பெருமன்றத்தின் தலைவராக இருந்து நூல்களை வெளியிட்டு, அனுசரணை செய்து, எழுத்தாளர்களிடம் இருந்து கணிசமான அளவு நூல்களைக் கொள்வனவு செய்து,வெளியீட்டு விழாக்கள், அறிமுக விழாக்கள், கருத்தரங்குகள், திரைப்படக்காட்சி விமர்சனங்கள் என்று செய்து சிறுகச் சிறுக புத்தகம் சேர்த்து நூல் நிலையம் என்னும் அறிவுக் கோயிலையும் கட்டி வடமராட்சி என யாழ்ப்பாணத்திலும் இலங்கையிலும் பேசப்படும் நூல்நிலையமாக்கினார்.

கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம் வெளியிட்ட சுகுமாரின் முதலுதவி, உயிர்ப்புகள் சிறுகதைத்தொகுதி, சிரித்திரன் சித்திரக் கொத்து, பொ.கமலரூபனின் 'எண்பதுகளுக்குப் பின் ஈழத்துப் புதுக்கவிதை', 'ஈழத்துத் தமிழ்க்கவிதை வரலாறு ஓர் அறிமுகம்' போன்ற நூல்கள் முக்கியமானவை. அண்மைக்காலமாகச் சங்கத்தினால் வெளியிடப்பட்ட 'சங்கம் செய்தி' இதழும் குறிப்பிடத்தக்கது. 'கூட்டுறவுச்சங்கங்கள்' என்பது தொடர்பாக மக்களிடம் இருந்த கற்பிதத்தை மாற்றி ஒரு கலாசார சக்தியாக கட்டைவேலி - நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் தொழிற்பட வழிவகுத்தவராக சிதம்பரப்பிள்ளை ஐயா விளங்கினார். இத்தன்மையை 'உயிர்ப்புகள்' சிறுகதைத்தொகுதி விமர்சனக் குறிப்பில் பேராசிரியர் கா.சிவத்தம்பி,

"உயிர்ப்புகள் என்னும் இச்சிறுகதைத்தொகுதி சுவாரசியமான ஒரு தொகுதியாகும். சீவியத் தேவைக்கான நுகர்வுப் பண்டங்களை விநியோகஞ் செய்வதற்கென தொழிற்படும் ஒரு நிறுவனம் மனித இன்னொரு மட்டத்துக்குத் தேவையான கலை நுகர்வுக்கான (நுகர்ச்சி என்பது 'இதுபோலும்') ஒரு பண்ட விநியோகத்தில் இறங்கியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்" என்று குறிப்பிட்டமை முக்கியமான விடயமாகும். வியாபார நோக்கத்துக்கு அப்பால் கலை இலக்கியம் தொடர்பான அக்கறையும் ஆர்வமும் கொண்டு படைப்பாளிகள் வளர்த்து அரவணைத்த அவரின் பக்குவமும் மனநிலையும் படைப்பாளிகளை விட ஒருபடி மேலுயர்த்தி 'ஒரு மாபெரும் இலக்கிய சக்தியாக' கருத இடமளிக்கின்றது. இன்று கூட்டுறவாளர்கள் நல்ல ஒரு கூட்டுறவாளனை இழந்துவிட்டார்கள். சமூகம் ஒரு பெரியாரை இழந்துவிட்டது. கலை இலக்கியவாதிகள் - கல்வியியலாளர்கள் ஒரு மாபெரும் சக்தியை, வலக்கரத்தை இழந்துவிட்டார்கள்.

# ஆண்டவன் படைத்த படைப்பில் ஒப்பற்ற சிருஷ்டி அம்மா



'அம்மா என்பது தமிழ் வார்த்தை அதுதான் குழந்தையின் முதல் வார்த்தை அம்மா இல்லாத குழந்தைகளுக்கும் ஆண்டவன் வழங்கும் அருள் வார்த்தை' என்பது சினிமாப் பாடல். அம்மா ஓர் ஆலயம். அம்மா ஒரு தெய்வம். தாயிற் சிறந்ததோர் கோயிலும் இல்லை என்றெல்லாம் தரணியிலே போற்றப்படுகின்றாள்.

அம்மாவின் அன்பிற்கு ஈடிணை இவ்வுலகில் எதுவுமில்லை. அன்பு, பாசம், கருணை அனைத்தின் பிறப்பிடமே அம்மாவின் உள்ளம்தான். பத்துமாதம் கருவிலே தாங்கி தாங்கொண்ணாத வேதனைகள் அனுபவித்துப் பெற்றெடுக்கும் குழந்தையை கண்ணின் மணி போன்று காத்து வளர்க்கின்றாள் அம்மா.

ஆண்டவன் படைப்பில் அபரிதமான சிறப்புக்களைக் கொண்ட சிருஷ்டி ஒன்று உண்டென்றால் அதுதான் அம்மா. காசினியின் மாந்தர்கள் எல்லாம் கண்கண்ட தெய்வம் ஒன்று உண்டென்றால் அதுதான் அம்மா. ஒப்பற்ற சொத்து உண்டென்றால் அதன் பெயர்தான் அம்மா. கனக மாலையிலும் மேலான ஒரு களஞ்சியம் இக்காசினியிலே இருக்கும் என்றால் அதுதான் அம்மா.

ஆழ்கடலில் முத்து போன்றவள் அம்மா. அழகு நிறைந்தவள் அம்மா. வெள்ளை நிறத்தை விட வெண்மையான புனிதம் என்றால் அது உண்மையாகவே அம்மாவின் பாசம்தான். உலகிலேயே அதி உயர்ந்த சிகரம் எது என்றால் அது அம்மாதான். பரந்த ஆகாயத்தை பார்க்கிலும் விரிந்த உள்ளம் கொண்டவள் அம்மா அம்மா. ஆதவனை போன்ற சுடர் அம்மா. தாரகை போன்ற சுடர் அம்மா என்பது ஆண்டவனால் படைக்கப்பட்ட உவமை கூறமுடியாத ஊதுவர்த்திதான். தான் ஓய்ந்தாலும் மாய்ந்தாலும் தனது மக்கள் வாழ்வு நிறைவு பெற்றால் போதும் என்ற திருப்தியோடு வாழும் அம்மா தனது தியாகத்தை உலகிற்கு வெளிக்காட்டாத சந்தனக்கட்டைக்கு சமமாகவே இருக்கின்றாள். குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்குமே சதாகாலமும் சகல சந்தர்ப்பங்களிலும் சம்பளமற்ற ஒரு தாதியாகப் பிரதியுபகாரம் கருதாது நிறைந்த மனதுடன் பணிபுரிகிறார் அம்மா.

எத்தகைய தவறையும் மன்னிக்கும் நீதிமன்றமொன்று உண்டென்றால் அது அம்மாவின் உள்ளம்தான். அம்மாவை யாருடனும் ஒப்பிட முடியாது. அவள் ஒப்பற்றவள். அன்னை போன்றொரு தெய்வமில்லை. அவர் அடி தொழ மறுப்பவர் மனிதரில்லை. இறைவனின் அதி உன்னதப் படைப்பு அம்மா. அவரது அன்புக்கு ஈடாக இவ்வுலகில் எதையுமே உவமை கூறிக்கொள்ள இயலாது என்றும் வாழும் இறைவனின் பிரதிநிதி அம்மா. உலகில் நடமாடும் உயிர் உள்ள தெய்வம் அம்மா. அம்மா தியாகத்தின் மறுவடிவம் இரவு பகலாய் கூலி வாங்காது உழைக்கும் தொழிலாளி அம்மா. அம்மாவின் மடி விலைமதிப்பற்ற தொட்டில். ஊனாய், உயிராய், உயிர் நாடியாய் எல்லாமும் தானாகி நிற்கும் ஓர் ஒப்பற்ற உயிர்தான் அம்மா. தனக்கென வாழாத தனக்கென எதையும் சேமிக்காத தன்னலமற்ற தியாகி அம்மாதான். அம்மாவின் அன்புக்கு ஈடாகாத எதையுமே எடுத்துக்கொள்ளமுடியாது. அந்த அன்புக்கு உலக சந்தையால் கூட விலை குறிக்கமுடியாது.

உள்ளே உயிர் வளர்த்து
உதிரத்தால் பால் கொடுத்து
அள்ளிடும்போது அன்பினை சேர்த்தெடுத்து
தொல்லை தனக்கென்றும்
சுகமெல்லாம் உனக்கென்றும்
சொல்லாமல் சொல்லிவிடும்
தேவதையின் கோயில் அது!
அது வாய்மை! அது தூய்மை
அது நேர்மை [illegible] தாய்மை.

சரத்மேரி நடேசன்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ரினிட்டி' கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

அமெரிக்காவின் 'ரினிட்டி' கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புகள் அனைத்தும் தற்போது யாழ்.மாவட்டத்தில் ஆரம்பமாகின்றன.

இப்பல்கலைக்கழகத்தின் வடமாகாண இணைப்பாளர் செ.செல்வதாசன் இது தொடர்பாக தெரிவித்த கருத்துகள் வருமாறு:

எமது மேற்படி பல்கலைக்கழகமானது தனது அனைத்து பட்டப்படிப்புக்களையும் யாழ்.மாவட்டத்தில் தற்போது ஆரம்பிப்பதையிட்டு நாம் மிகவும் பெருமையடைகிறோம். ஏனெனில் எமது பல்கலைக்கழகத்தை பின்வரும் சர்வதேச அரசாங்கங்கள் மற்றும் புகழ் பெற்ற நிறுவனங்கள் எமது பல்கலைக்கழகத்தினுடைய அனைத்து பட்டப்படிப்புகளையும் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டுள்ளன. அந்தவகையில் எமது பல்கலைக்கழகமானது

1. அமெரிக்காவில் கல்வித்துறையின் யு.ஜ.சியின் ஒரு பகுதியாக விளங்குகின்றது.

2. அமெரிக்க கல்வி மற்றும் தொழில் வாய்ப்புத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பார்ந்த கல்வி நிறுவனமாகவும் பயிற்சியளிக்கும் மற்றும் நாடாளுமன்றத்தின் கல்வி மற்றும் விஞ்ஞான சட்டங்களின் அடிப்படையில் பட்டங்களையும் ஏனைய விருதுகளையும் வழங்கும் ஸ்தாபனமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது.

3. ரினிட்டி கல்லூரி மற்றும் பல்கலைக் கழகம் **JPA(L)130/10/2-6Kit** அக்ரடிசன் சான்றிதழ் கொண்டது. இது **UNESCO** வாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

4. ஐக்கியப்பட்ட சர்வதேச ஆலய நிறுவனத்திலும் உறுப்புரிமை பெற்றது.

எனவே மேற்படி அரச மற்றும் தனியார் நிறுவனங்களால் எமது பல்கலைக்கழகமானது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் எமது பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டச்சான்றிதழ்களும் மிகவும்

## விளம்பர விவரணம்

பெறுமதி வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

எனவே இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த எமது இப்பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் பிரிவானது யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு பல்வேறு வகையான நன்மைகளை வழங்குகின்றது எனலாம். அந்தவகையில்

1) பட்டப்படிப்பிற்கு எமது பல்கலைக் கழகத்தால் அறவிடப்படும் தொகையானது மிகமிகக் குறைவாகவே காணப்படுவது இதன் முக்கிய சிறப்பம்சம் ஆகும்.

2) பரீட்சைகள் அனைத்தும் எமது பல் கலைக் கழக பட்டப்படிப்பு பிரிவின் உயர் அதிகாரிகளது மேற்பார்வையின் கீழ் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்.

3) யாழ்.மாவட்டத்தில் இருந்தவாறே பட்டதாரியாகின்ற அதேவேளை மாணவர்கள் விரும்பின் பட்டப்பின்படிப்பை **USA, U.K, CANADA, INDIA** ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் அல்லது கல்லூரிகளில் தொடர முடியும். இதற்கான **Visa** ஒழுங்குகள் யாவும் எம்மால் செய்து தரப்படும்.

4) எமது பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்னர் 1984ஆம் ஆண்டு U.K இல் ஆரம்பிக்கப்பட்டு U.K அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உலகப்புகழ் பெற்ற கணனி நிறுவனமான **Association of computer professionals** நிறுவனத்தில் நீங்கள் உறுப்பினராக இணைந்து உங்கள் தராதரத்தை மேலும் உயர்த்திக் கொள்ள முடியும்.

எனவே இதுபோன்ற பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ள எமது பல்கலைக்கழகம் ஆனது பின்வரும் பட்டப்படிப்புகளை யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகின்றது.

**01. Bachelors Degree:**

I. Bachelors of ICT (B.ICT) (Three Years + ICT Training)
II. Bachelors of Business IT (B.B.IT) (Two Years + Training)
III. Bachelors of Business Management (BBM) (Two Years + Training)
IV. Bachelors of Commerce (B.Com) (Two Years + Training)
V. Bachelors of International Business (B.IB) (Two Years + Training)
VI. Bachelors of Computer Science-B.Sc. (Hons) (Two Years +ICT Training)

**02. Masters Degree**

I. Master of ICT (MICT) (1½ Years+ Project Training)
II. Master of Scince (IT) (M.Sc in IT (1½ Years+ Project Training)
III. Master of Commerce (M.Com) (1½ Years+ Project Training)

எனவே மேற்படி ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு பிரிவில் இணைந்து உங்கள் எதிர்கால வாழ்க்கையை நீங்கள் சிறப்பாக அமைத்துக்கொள்ள எமது வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்ற அதேநேரம் இலங்கையில் எமது இப்பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு மற்றும் கலாநிதிப்பட்டம் பெற்ற பலர் இன்று அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிப்பாளர்களாகவும் உயர் அதிகாரிகளாகவும் கடமை புரிவது எமக்கு மிகவும் பெருமை சேர்க்கும் விடயமாக அமைகின்றது. இவ்வாறு எமது பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று இன்று உயர் அதிகாரிகளாக இருப்போரது பெயர் விவரங்களை எமது பட்டப்படிப்பு பிரிவில் இருந்து நீங்கள் அறிந்துகொள்ள முடியும்.

எனவே உங்கள் காலத்தை வீணடிக்காது இன்றே எமது பல்கலைக்கழகத்தில் இணைந்துகொள்ளவும். எமது பல்கலைக்கழக பட்டப் படிப்புகளை நீங்கள் கீழ்வரும் கணனி நிறுவனங்களில் கற்கமுடியும். யாழ்.மாணவர்கள் மற்றும் வடமராட்சி, தென்மராட்சி மாணவர்கள் CATWAS.COM, **Computer Academy, #26, Somasundram Avenue, Chundikuli, Jaffna**

வலிகாமம் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் **UNI, ICT Education Trainers, Jaffna Road, Manipay** என்னும் முகவரிகளில் உள்ள நிறுவனங்களில் எமது பல்கலைக் கழகப் பட்டப் படிப் பைக் கற்கமுடியும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படின் 060-221-6433 அல்லது 0777110862 என்னும் தொலைபேசி வாயிலாக தொடர்புகொள்ளலாம்.

## பண்ணிசை வகுப்புகள்

சங்கானை நிற்சாமம் ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான பண்ணிசை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பண்ணிசை வகுப்புகள் தொடர்ந்து நடைபெறும் என்று பாடசாலைப் பொறுப்பதிகாரி மா. கணேஸ் தெரிவித்துள்ளார். (203)


அம்பாள் துணை

## கொக்குவில்- நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம் 2009 விரோதி வருட மகோற்சவ விஞ்ஞாபனம்

இன்று (27.06.2009) சனிக்கிழமை மு.ப.10.30 மணி கொடியேற்றம்
29.06.2009 திங்கட்கிழமை பி.ப. 3.30 மணி வசந்த மண்டபப் பூஜை அதனைத் தொடர்ந்து திருமஞ்சத்தில் அம்பாள் திருவீதியுலா
03.07.2009 வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணி வசந்த மண்டபப் பூஜை அதனைத் தொடர்ந்து கைலாயவாகனத்தில் அம்பாள் திருவீதியுலா
05.07.2009 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணி வசந்த மண்டபப் பூஜை, அதனைத் தொடர்ந்து சப்பரத்தில் அம்பாள் திருவீதியுலா.
06.07.2009 திங்கட்கிழமை காலை 7.00 மணி வசந்த மண்டபப் பூஜை அதனைத் தொடர்ந்து இரதோற்சவம் நடைபெறும்.
07.07.2009 செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணி வசந்த மண்டபப் பூஜை அதனைத் தொடர்ந்து தீர்த்தோற்சவம் நடைபெறும்.

தினமும் காலை 9.45 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை நடைபெறும்.
பிற்பகல் 4.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெறும்.

நந்தாவில்,
கொக்குவில். (86621)
ஆலய பரிபாலன சபையினர்.

## COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

ஒருவாரகால முழுநேரகற்கைநெறிகள்.

**Diploma in Graphic Designing**
Adobe Photo shop+Corel Draw Macro Media Flash+Cool 3D Studio

**Diploma in Hardware Engineering**
Assembling+Upgrading+Troubleshooting+Repairing Servicing+Software Installation+Config Networking Ect..

**Diploma in Video Editing**
Adobe Photoshop+Cool 3D Studio+VCD cutter Capturing+Pinnacle Studio+Adobe premeir

வகுப்புக்கள் ஆரம்பம்:- 29.06.2009. 9 AM


## சுனாமி வீடமைப்புத் திட்டம்
## சர்வதேச லயன்ஸ் கழகம்- பல் மாவட்டம் 306- இலங்கை
## ஈடுபாடு வெளிப்படுத்தல்

யாழ்ப்பாணம், வடமராட்சி வல்லிபுரம் கொலனியில் 61 சுனாமி வீடுகளை அவசர அடிப்படையில் கட்டுவதற்கு ஈடுபாடு காட்டும் கட்டட ஒப்பந்தகாரர்.

**ARCHITREND CONSULTANTS**
**NO.35, Vihara Mawatha, Pepiliyana**

என்ற ஆலோசகர்களின் பணிமனைக்கு முன்தகைமைப் பரிசீலனைக்காக மேல்வரும் ஆவணங்களை இந்த விளம்பரத் திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் கிடைக்கக் கூடியதாக அனுப்பும்படி கோரப்படுகின்றனர்.

01. கடந்த ஐந்து வருடங்களில் செய்த இத்தகைய வேலைகளுக்கான ஆவணபூர்வ ஆதாரங்களும் அத்தகைய வேலைகளின் பெறுமதியும்.
02. நிதி ஸ்திரத்தன்மை பற்றிய ஆவணபூர்வ ஆதாரம்.
03. அமர்த்தியுள்ள ஆளணி பற்றிய தகவல்களும் முக்கிய ஆளணியின் தகைமைகளும் அனுபவங்களும்.
04. எந்திரங்களும் உபகரணங்களும் உள்ளமை பற்றிய தகவல்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு கேள்வி சமர்ப்பிப்பதற்குரிய ஆவணங்கள் வழங்கப்படும்.

லயன் சக் விஜேநாதன்,
தலைவர்,
சுனாமி மீள்கட்டமைப்பு, புனர்வாழ்வுக் குழு,
கொழும்பு.
திகதி: 26.06.2009
(86624)

## வலி.கிழக்குப் பிரதேச சபை, புத்தூர்
## கேள்வி அறிவித்தல்- 2009

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைக்கு இக்ராட் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 29.06.2009- 03.07.2009 மு.ப. 11.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி: 03.07.2009 பி.ப.1.00 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 03.07.2009 பி.ப.1.30 மணி
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விப் பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர்" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு எதிர்வரும் 03.07.2009ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

குறிப்பு: கீழ்க்குறிப்பிடப்பட்ட வீதி வேலைகளுக்குரிய தார் பிரதேச சபையால் வழங்கப்படமாட்டாது.

| இல. வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரப்பணம் | வற் வரி 12% |
|---|---|---|---|
| 01. மடத்தடி வீதி திருத்தம் | 10500.00 | 1000.00 | 120.00 |
| 02. கல்லூரி வீதி திருத்தம் | 17000.00 | 1000.00 | 120.00 |
| 03. R.C.பாடசாலை வீதி திருத்தம் | 12800.00 | 1000.00 | 120.00 |
| 04. முருகன் வீதி திருத்தம் | 16000.00 | 1500.00 | 180.00 |
| 05. பஸ் தரிப்பிடம் அமைத்தல் (கோப்பாய்) | 1200.00 | 500.00 | 60.00 |
| 06. பஸ் தரிப்பிடம் அமைத்தல் (அச்சுவேலி) | 1000.00 | 500.00 | 60.00 |

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், புத்தூர். 25.06.2009
(சி/559208)
தம்பையா நடராசா
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் பன்றிக் காய்ச்சலால் பத்து லட்சம் பேர் பாதிக்கப்பட்டனர்

## சுகாதார அதிகாரிகள் தகவல்

அட்லாண்டா, ஜூன் 27

அமெரிக்காவில் ஏறத்தாழ 10 லட்சம் பேர் பன்றிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 6 சதவீதமானோர் நகரவாசிகளாவர் என அமெரிக்க சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

நோய் கட்டுப்பாடு, தடுப்பு மத்திய நிலையங்களுக்கான காய்ச்சல் கண்காணிப்பு அதிகாரி லைன் பைனலி, தடுப்பூசி சம்பந்தப்பட்ட கருத்தரங்கில் இது தொடர்பாக அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளார்.

இவர்களைத் தவிர, அமெரிக்காவில் வழக்கமான காய்ச்சலால் ஒவ்வோர் ஆண்டும், 1 கோடியே 50 லட்சம் முதல் 6 கோடி அமெரிக்கர்கள் வரை பாதிக்கப்படுகின்றனர். தற்போது உலகில் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளோரில் அரைவாசிப் பேர் அமெரிக்கர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஏறத்தாழ 28 ஆயிரம் பேர் பன்றிக் காய்ச்சல் வைரஸால் பீடிக்கப்பட்டுள்ளமை முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள 3 ஆயிரத்து 65 பேரும் அடங்குவர். 127 பேர் மரணித்துள்ளனர்.

பன்றிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டோர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்து வருகிறது என பைனலி தெரிவித்துள்ளார்.

பன்றிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளோர் வேறுபல உபாதைகளுக்கும் உள்ளாகியுள்ளனர். இவர்களில் 3 சதவீதத்தினர் ஆஸ்த்மாவாலும், 16 சதவீதமானோர் நீரிழிவு வியாதியாலும் பீடிக்கப்பட்டுள்ளனர். 12 சதவீதத்தினர் இதய உபாதைகளிலிருந்து விடுபட்டோராகவும், 11 சதவீதமானோர் இருதய சம்பந்தப்பட்ட வியாதியஸ்தர்களாகவும் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உயிரிழப்புகளுக்குப் பொறுப்பு தேர்தல் மோசடிக் காரர்களே

## ஈரானிய எதிரணித் தலைவர் குற்றச்சாட்டு

தெஹ்ரான், ஜூன் 27

"ஈரானில் சமீபத்திய ஆர்ப்பாட்டங்களின்போது இடம்பெற்ற இரத்தக்களரிகளுக்கும், உயிரிழப்புகளுக்கும், தேர்தல் மோசடிகளின் பின்னணியிலுள்ள சக்திகளே பொறுப்பேற்க வேண்டும்" என முன்னாள் பிரதமரும், எதிரணித் தலைவருமான மிர் ஹொசின் முஸாவி தெரிவித்துள்ளார்.

இதனை இவர் தமது செய்திப் பத்திரிகையான 'கலாமிஹ'ஹின் இணையம் மூலமாக தெரிவித்துள்ளார். ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க பொலிஸாரும், இராணுவத்தினரும் குரூர நடவடிக்கைகளை மேற்கொண்டமை தொடர்பான படங்களும் இணையத்தின் மூலமாக வெளியிடப்பட்டுள்ளன.

"தனிப்பட்ட நலன்களுக்காகவும், மிரட்டல்களுக்காகவும் ஈரானிய மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தைக் கைவிடமாட்டேன். நடந்து முடிந்த மோசடித் தேர்தலை ரத்துச் செய்யுமாறு நான் கோரிக்கை விடுத்து வருகிறேன். இந்த நிலைப்பாட்டிலிருந்து என்னை அழுத்தங்களால் அகற்றிவிட முடியாது" என்றும் அவர் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

# ஈராக்கில் குண்டுத்தாக்குதல்: 11 பேர் பலி; 46 பேர் காயம்

பக்தாத், ஜூன் 27

ஈராக்கின் தலைநகரான பக்தாத்தில் கைத்தொழிற் பேட்டைகள் நிறைந்த பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். 46 பேர் காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

பாப் அல்-ஷேக் பகுதியிலுள்ள மோட்டார் சைக்கிள் விற்பனை நிறுவனமொன்றுக்கருகில், நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்றில் இக் குண்டு வைக்கப்பட்டிருந்துள்ளது என்றும் அது குறிப்பிட்டது.

ஈராக்கில் முதல் நாளான வியாழக்கிழமை, மூன்று இடங்களில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் காயமடைந்தனர். பல கட்டடங்கள் சேதமடைந்தன என்றும் பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

அன்பார் மாகாணத்திலுள்ள பளூஜா நகருக்கருகில், ரோந்துப் பொலிஸாரின் வாகனமொன்று வீதியோரக் குண்டுவெடிப்பில் சிக்கியது. இதில் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டனர். தூக்கி வீசப்பட்ட வாகனம் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது என பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

பாபா மாவட்டத்திலுள்ள பஸ் நிலையமொன்றுக்கருகில், கார்க்குண்டொன்று வெடித்தது. இதில் இருவர் கொல்லப்பட்டனர். 31 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அவர்களில் 12 பேர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர் என அதிகாரிகள் கூறினார்கள்.

கிழக்குப் பக்தாத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் படையினரின் வாகனங்கள் இரு குண்டுத்தாக்குதல்களில் சிக்கின. இதில் 9 சிப்பாய்கள் படுகாயமடைந்தார்கள் என அமெரிக்க இராணுவ-வட்டாரம் தெரிவித்தது.

பக்தாத்துக்கருகிலுள்ள சத்ர் நகரில் புதன்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 78 பேர் கொல்லப்பட்டனர். சில தினங்களுக்கு முன்னர், வட நகரான கிர்குக்கில் இடம்பெற்ற ட்ரக் குண்டுத்தாக்குதலில் 78 பேர் பலியாகியுள்ளனர். ஈராக்கில் பரவலாக குண்டுத்தாக்குதல்கள் மீளத்தலைதூக்கியுள்ளன.

# அரசு சார்பு ஆயுதக் குழுவினரில் எட்டுப்பேர் ஈரானில் கொலை

தெஹ்ரான், ஜூன் 27

ஈரானிய தலைநகரான தெஹ்ரானில் தடையையும் மீறி, வியாழக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் வன்முறை தலைதூக்கியது. இதில் அரசு சார்பு பாஸிஜ் ஆயுதக் குழுவைச் சேர்ந்த எட்டுப் பேர் கொல்லப்பட்டனர். டசின் கணக்கானோர் காயமடைந்தனர்.

இவர்களைத் தவிர, ஆர்ப்பாட்டப் பேரணிகளில் ஏற்கனவே 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர். தேர்தல் முடிவு வெளியானது முதல் இது வரை நூற்றுக்கணக்கான எதிரணி ஆர்ப்பாட்டக்காரர்களும், தொண்டர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

ஆர்ப்பாட்டங்களின்போது கைது செய்யப்பட்டவர்கள் மீதான விசாரணைகளை மேற்கொள்வதற்காக, ஈரானியஅரசால் விசேட நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. அதேவேளை, தேசத்துரோகக் குற்றவாளிகளுக்குக் கடும் தண்டனை விதிக்கப்படுமென்றும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கப் படைகள் வெளியேற்றம்: ஈராக்கில் 30 இல் கொண்டாட்டம்

பக்தாத், ஜூன் 27

ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதியிலிருந்து வெளியேறத் தொடங்குகின்றன. அதனால் அமெரிக்கப் படைகள் வெளியேறத் தொடங்கும் தினத்தை கோலாகலமாகக் கொண்டாட ஈராக் அரசு முடிவு செய்துள்ளது.

ஈராக் அணு ஆயுதம் தயாரிக்க முயற்சிக்கிறது. ஏராளமான இரசாயன ஆயுதங்களை பதுக்கி வைத்திருக்கிறது. இதனால் அந்தப் பிராந்தியத்துக்கே ஆபத்து என்று அமெரிக்கா தொடர்ந்து குற்றஞ்சாட்டி வந்தது.

இந்நிலையில், ஈராக்கிலுள்ள அணு உலைகளை சோதனையிட சர்வதேச முகாமைக்கு ஈராக் அரசு அனுமதி அளிக்க மறுக்கின்றது எனக் கூறி அமெரிக்கா தலைமையிலான பல்நாட்டுப் படை ஈராக் மீது படையெடுத்தது.

பெரும் தாக்குதலுக்குப் பின்னர், அங்கு சதாம் ஹுஸைன் தலைமையிலான ஆட்சியை அமெரிக்கா அகற்றிவிட்டு தற்போது புதிய ஆட்சியை ஏற்படுத்தியுள்ளது. புதிய ஆட்சி ஏற்பட்டதையடுத்து, அமெரிக்கப் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறவேண்டும் என பரவலாக கோரப்பட்டது. அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் கூட படைகள் வெளியேற வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்நிலையில், அமெரிக்கப் படைகள் படிப்படியாக விலக்கிக்கொள்ளப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்தது. ஒபாமா தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அமெரிக்கப் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறுவதற்கு முக்கியத்துவம் அளித்தார்.

இதையடுத்து, இந்த ஜூன் 30 ஆம் திகதியிலிருந்து படைகளை படிப்படியாக விலக்கிக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அமெரிக்கப் படையின் முதல் பிரிவு ஈராக்கிலிருந்து வெளியேறுகிறது.

அமெரிக்கப் படைகள் வெளியேறும் தினத்தை கோலாகலமாகக் கொண்டாட ஈராக் அரசு முடிவு செய்துள்ளது. படைகள் வெளியேறுவதற்கு ஒரு நாள் முன்னரே கொண்டாட்டங்கள் தொடங்கி விடும். 30 ஆம் திகதி பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறுவது பெரும் வெற்றி என ஈராக் பிரதமர் அல்மாலிகி தெரிவித்துள்ளார்.

---

பொப் இசையுலகின் முடிசூடா சக்கரவர்த்தி மைக்கல் ஜக்சன் நேற்று அதிகாலை அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்ஜல்ஸ் வைத்தியசாலையில் மாரடைப்பால் காலமாகியுள்ளார். இறக்கும் போது அவருக்கு வயது 50. மைக்கல் ஜக்சனின் திடீர் மரணம் அவரது கோடிக்கணக்கான ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. அவரின் மரணத்தை ஒட்டி அவரைப் பற்றிய சிறுகுறிப்பு ஒன்று இங்கு விரிகிறது....!




1958 இல் அமெரிக்காவின் இந்தியானாவில், உருக்குத் தொழிலாளியான ஜோ ஜக்சனுக்கும், அவரது மனைவி கத் திரினுக்கும் பிறந்தார் மைக்கல் ஜக்ஸன்.

9 வயதில் இசைத் துறையில் முதல் காலடியை எடுத்து வைத்து மேடைகளில் பொப் பாடகராக வலம் வரத் தொடங்கினார்

1968 இல் 'தி ஜக்சன் 5' எனும் பெயரில் தனி இசைக்குழுவை அவர் தொடங்கினார்.

1970 இல் உலகின் மிகச்சிறந்த பொப் பாடகராகத் திகழ்ந்தார். அப்போது அவருக்கு வயது 12.

1972 இல் தனது தனி அல்பத்தை அவர் வெளியிட்டார்.

1978 இல் தனது முதல் திரைப்படமான 'திவிஸ்' இல் நடித்தார்.

1979 இல் தமது நண்பர் ஜோன்னுடன் இணைந்து 'ஒப் தி வால்' இசை அல்பத்தை வெளியிட்டார்

அப்போது அந்தஇசை அல்பத்தின் ஒருகோடி இசைத்தட்டுக்கள் விற்பனையாகின.

டிஸ்கோ இசையை முதன் முதலில் இந்த இசை மூலம் பிரபல்யப்படுத்தியவர் இவரே.

1982 இல் 'திரில்லர்' இசை அல்பம் வெளியிட்டார். அதற்கு 8 கிராமிய விருதுகள் கிடைத்தன. 4கோடியே 10 லட்சம் இசைத்தட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டு அது உலக சாதனையாக கின்னஸிலும் பதிவு செய்யப்பட்டது.

1992 இல் 'ஹீல் த வோர்ல்ட்' என்ற பெயரில் அறக்கட்டளையை அவர் தொடங்கினார். மனதால், நிறவெறியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அதன் மூலம் உதவி செய்தார்.

அதற்காக அமெரிக்காவில் 'நெவர் லாண்ட்' எனும் பெரிய பண்ணை இல்லத்தை வாங்கினார். அங்கேயே சிறுவர்களுடன் பொழுதைக் கழித்தார்.

1994 இல் பிரபல பாடகர் எல் விஸ் பிரஸ்லேயின் மகள் லிசாமேரியை திருமணம் செய்தார்.

1996 இல் அவரை விவாகரத்துச் செய்தார்.

அதே வருடம் டெபி பிரே என்ற பெண்ணைத் திருமணம் செய்தார்.

1999 வரை இந்த திருமண உறவு நீடித்ததால், இரு குழந்தைகள் பிறந்தனர்.

மைக்கல் பிரின்ஸ் 1, மைக்கல் பிரின்ஸ் 2 என இந்தக் குழந்தைகளுக்குப் பெயரிட்டார்.

2005 ஆம் ஆண்டு அவர் மீதிருந்த அனைத்து பாலியல் புகார் வழக்குகளிலிருந்தும் நீதிமன்றம் அவரை விடுவித்தது.

அதன் பிறகு, மீண்டும் ஒரு இசைத் துறை சாதனை படைக்க ஆயத்தமானார் மைக்கல். எதிர்வரும் ஜூலை 13 ஆம் திகதி லண்டனில் மாபெரும் இசை நிகழ்ச்சியை நடத்தத் திட்டமிட்டார். தீவிர ஒத்திகையையும், அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ்ஸில் நடத்தி வந்தார். இவ் இசை நிகழ்ச்சிக்கான 75 ஆயிரம்டிக்கெட்டுக்கள் சுமார் நான்கு மணித்தியாலங்களில் விற்றுத் தீர்க்கப்பட்டன.

'இறுதித்திரை' என்று பெயரிடப்பட்ட அந்த நிகழ்ச்சி இறுதிவரை நடைபெறாமலேயே போனது. இவருடைய வித்தியாசமான நடனப்பாணியும், குரலும் உலகெங்கும் உள்ள எல்லா தரப்பு மக்களையும் கவர்ந்திருக்கிறதென்பதை இவருடைய இழப்பை கேள்விப்படும் போது எமக்குள் ஏற்படும் மனவருத்தம் கூறுகிறது. மைக்கல் ஜக்சன் தனது 50 வருட வாழ்வில் எதிர்கொண்ட முக்கிய தருணங்கள் இவ்வாறு இருக்க, மறுபுறம் சில எதிர்மறையான விடயங்களும் இவருக்கு நடைபெற்றன.

அவ்வப்போது பாலியல் தொடர்பான புகார்களிலும் இவர் சிக்கினார். கறுப்பு இனத்தவரான மைக்கல் ஜக்சன் தனது உடல் முழுவதையுமே தொடர் 'கொஸ்மெடிக் சர்ஜரி' சிகிச்சை மூலம் வெள்ளையாக மாற்றிக்கொண்டார். முகத்தில் மட்டும் பல முறை 'கொஸ்மெடிக்' சிகிச்சை நடத்தப்பட்டதால், இவரது முகம் குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு உருமாறத் தொடங்கியிருந்தது. அத்துடன் தோல் புற்று நோயையும் இது வரவழைத்தது எனக் கூறப்பட்டது.

மைக்கல் ஜக்சன் மீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதும், ஓர் இசைக்கலைஞன் என்ற ரீதியில் சர்வதேச ரீதியில் அவரது திறமை அபரிமிதமானதென்பதையும் அதிசயிக்கத் தக்கதென்பதையும் எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங். - தி.மு.கவிடையே இலட்சிய உறவா? சபையில் நேற்று அனல் கிளப்பியது கம்யூ.!

சென்னை, ஜூன் 27

தி.மு.கவிற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இலட்சிய உறவு உள்ளதா என்பது குறித்து சட்டசபையில் நேற்று காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே காரசார வாக்குவாதம் நடைபெற்றது.

தமிழக சட்டசபையில் நேற்று உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் இதுதொடர்பாக உறுப்பினர்கள் பேசினர்.

பாலபாரதி (மார்க்சிஸ்ட்) பேசுகையில் -

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற மகிழ்ச்சியில் தி.மு.க. உள்ளது. மத்தியில் தனித்து ஆட்சி அமைக்கும் நிலையில் காங்கிரஸ் கட்சி இரட்டிப்பு மகிழ்ச்சியில் உள்ளது - என்றார்.

துணைமுதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில்-

நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்கள் எனக் கேட்டார்.

அதற்கு பாலபாரதி, தோல்வி ஒரு புறம் இருந்தாலும் தொடர்ந்து விடாமுயற்சியுடன் நாங்கள் செயல்பட்டு வருகிறோம். தி.மு.க. மற்றும் கம்யூனிஸ்ட்களின் ஆதரவுடன் மத்தியில் ஆட்சி நடைபெற்றபோதே மாநிலங்களுக்கு 27 சதவீத நிதியைத்தான் மத்திய அரசு வழங்கியது. இப்போது சொந்தக் காலில் நிற்கிறார்கள். அளவு மாற்றம் குண மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது கம்யூனிஸ விதி என்று கூறினார்.

பீட்டர் அல்போன்ஸ் (காங்.) பேசுகையில் -

தி.மு.கவுக்கும் காங்கிரஸுக்கும் இடையே சந்தேக விதைகளை விதைக்க பாலபாரதி முயற்சி செய்கிறார். தி.மு.க. ஆதரவின்றி மத்தியில் காங்கிரஸ் அரசு நடக்கும் சூழலிலும் தமிழகத்தில் காங்கிரஸ் ஆதரவோடு தி.மு.க. ஆட்சி நடைபெற்றாலும் அதற்கும் அப்பாற்பட்டு எங்களுக்கிடையே இலட்சிய உறவு உள்ளது. நாங்கள் நன்றாகச் செயற்பட்டு வருகிறோம்.

மாநிலங்களுக்கு கூடுதல் நிதி வழங்க வேண்டும் என்பதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து ஏதும் இல்லை என்று கூறினார்

சிவபுண்ணியம் (கம்யூனிஸ்ட்) பேசுகையில் -

பத்திரிகைகளில் காங்கிரஸ் கட்சியின் வேறொரு இலட்சியம் பற்றி அடிக்கடி செய்திகள் வருகின்றன. உங்கள் உறுப்பினர்களை உங்கள் தலைவர் சுதர்சனம் மத்தியஸ்தம் செய்கிறார் எனச் செய்திகள் வருகின்றன என்றார்.

அதற்கு சுதர்சனம் (காங்.) பதிலளிக்கையில்-

தேர்தல் தோல்வியால் சிவபுண்ணியம் இப்படி பேசுகிறார். கம்யூனிஸ்ட் கட்சிகளை மக்கள் நிராகரித்து விட்டார்கள். மத்திய அரசுக்கு கம்யூனிஸ்ட்டுகள் அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெற்றது தவறு என்று உங்கள் தலைவர் ஏ.பி. பரதனே கூறிவிட்டார். எனவே, சிவபுண்ணியம் இப்படிப் பேசுவதை நிறுத்துவது நல்லது - என்றார்.

மீண்டும் பாலபாரதி பேசியபோது -

பெருந்தலைவர்கள் காமராஜர், இந்திரா காந்தி போன்றவர்களே தேர்தலில் தோல்வியைத் தழுவியிருக்கிறார்கள்.

ஜனநாயகத்தில் வெற்றியும் தோல்வியும் சகஜம். ஆனால் வெற்றியை விட தோல்வியில் தான் அதிக படிப்பினைகளைப் பெற முடியும். எனவே முதலமைச்சர் கேட்டுக்கொண்டபடி 50 சதவிகித நிதியை மாநில அரசுகளுக்கு மத்திய அரசு ஒதுக்க வேண்டும் - என்றனர்.

## அன்று வந்த கண்ணன் இன்று வருவானோ...



உத்தரப் பிரதேசத்தில் கண்ணபிரான் பிறந்த மதுராவில் ரத யாத்திரை நடக்கிறது. இதை முன்னிட்டு ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில் நேற்றுமுன்தினம் ரத விழா கொண்டாடப்பட்டது. இதில் கலந்து கொண்ட சிறுமிகள் கோலாட்டம் ஆடுகின்றபோது......

# தமிழக அரசின் சார்பில் மீண்டும் இலங்கைக்கு நிவாரணப்பொருள்

சென்னை, ஜூன் 27


இலங்கையில் போர் முடிவுக்கு வந்துவிட்டதால், அங்குள்ள தமிழர்களுக்கு மீண்டும் நிவாரணப் பொருள்கள் அனுப்ப தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இலங்கையில் பல பகுதிகளில் தமிழர்கள் உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழக அரசின் சார்பில் ஏற்கனவே மருந்து மற்றும் உணவுப் பொருள்களுடன் நிவாரணக் கப்பல் அனுப்பி வைக்கப்பட்டது.

மீண்டும் நிவாரணப்பொருள்கள் அனுப்ப ஒரு லட்சத்து 16 ஆயிரம் செருப்பு கொள்முதல் செய்ய ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. கறித்தூள் 200 கிராம் பக்கெட் 80 ஆயிரம் கொள்முதல் செய்யவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவை நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் கொள்முதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த மாதத்துக்குள் இந்தப் பொருள்கள் கொள்முதல் செய்யப்பட்டுவிடும் என்று அதிகாரிகள் கூறினர்.

# தலிபான் தீவிரவாதிகளால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல்

## அந்தோணி தகவல்



புதுடில்லி, ஜூன் 27

சமீப காலத்தில் இந்தியாவுக்குள் ஊடுருவும் தீவிரவாதிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. ஆனால், தலிபான் தீவிரவாதிகளால் இந்தியாவுக்கு பெரும் அச்சுறுத்தல் உள்ளது - என்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி கூறினார்.

டில்லியில் முப்படைத் தளபதிகள் மற்றும் இராணுவத்திலுள்ள உயர்மட்ட அதிகாரிகளின் 2 நாள்கள் மாநாடு நேற்றுமுன்தினம் தொடங்கியது. மாநாட்டை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

காஷ்மீர் மாநிலம் உட்பட எல்லைப்பகுதி முழுவதும் பாதுகாப்பைப் பலப்படுத்தி இருக்கிறோம். இதன் காரணமாக சமீப காலத்தில் இந்தியாவுக்குள் ஊடுருவும் தீவிரவாதிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. ஆனால் இதை ஒரு முன்னேற்றம் என்று கூறி பெருமைப்பட்டு கொள்ள முடியாது.

காஷ்மீர் உட்பட பல பகுதிகளில் இன்னமும் தீவிரவாதிகளின் செயற்பாடு இருந்து கொண்டுதான் இருக்கிறது. அவர்களால் தொடர்ந்து அச்சுறுத்தல்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இதுதான் உண்மையான ஆபத்து. ஆகவே காஷ்மீர் உட்பட எல்லையின் எந்தப் பகுதியிலும் படைக்குறைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை.

தலிபான் தீவிரவாதிகளால் உலகத்துக்கும், நமது மண்டலத்துக்கும் பெரிய அச்சுறுத்தல்கள் உள்ளன. குறிப்பாக தலிபான் தீவிரவாதிகளால் இந்தியாவுக்கு ஆபத்து உள்ளது.

மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் கடலோர பாதுகாப்பை மேலும் பலப்படுத்தி இருக்கிறோம். தற்போது எத்தகைய சவாலையும் சந்திக்கும் வகையில் நமது கடற்படை மேலும் வலுவாக விளங்குகிறது - என்றார்.

# சரப்ஜித்தின் உயிரைக் காக்க இறுதி முயற்சி பாக். முன்னாள் அமைச்சர் கருணை மனு




சரப்ஜித் சிங்கின் கருணை மனுவை பாக். உச்ச நீதிமன்றம் கடந்த புதனன்று நிராகரித்தது. இதை எதிர்த்து பஞ்சாபில் சீக்கியர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் சரப்ஜித்தின் சகோதரி பூனம் (வலமிருந்து 2ஆவது), மகள் தல்பீர் கவுர் ஆகியோர் கலந்து கொண்டபோது......

இஸ்லாமாபாத், ஜூன் 27

தூக்குத் தண்டனையை எதிர்நோக்கி இருக்கும் இந்தியரான சரப்ஜித்சிங்கின் உயிரைக் காப்பாற்றுவதற்காக, பாகிஸ்தான் முன்னாள் அமைச்சர் அந்த நாட்டின் ஜனாதிபதியிடம் கருணை மனுத் தாக்கல் செய்கிறார்.

பாகிஸ்தானில் உள்ள லாகூர் நகரில் கடந்த 1990ஆம் ஆண்டு நடந்த தொடர் குண்டு வெடிப்பு தொடர்பாக, சரப்ஜித்சிங் என்ற இந்தியரை பாகிஸ்தான் பொலிஸார் கைது செய்தனர். இவர் பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் அருகே உள்ள பிக்கிவிந்த் கிராமத்தைச் சேர்ந்தவர். இவருக்கு பாகிஸ்தான் நீதிமன்று மரண தண்டனை விதித்தது.

இந்தத் தண்டனையை ரத்து செய்யக் கோரி சரப்ஜித் சிங் சார்பிலும், பாகிஸ்தான் முன்னாள் மனித உரிமைகள் அமைச்சரும், மனித உரிமை ஆர்வலருமான அன்சார் புர்னி ஆகியோர் தாக்கல் செய்த மறுஆய்வு மனுவை பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் கடந்த புதனன்று ரத்துச் செய்தது. இதனால், பாகிஸ்தான் சிறையில் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கி சரப்ஜித் சிங் காத்திருக்கிறார்.

அவரது உயிரைக் காப்பாற்றுவதற்காக அன்சார் புர்னி தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார். ஏற்கனவே இவர் தாக்கல் செய்த கருணை மனுவின் காரணமாக, கடந்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி சரப்ஜித் சிங்குக்கு நிறைவேற்றப் படவிருந்த தூக்குத்தண்டனையை பாகிஸ்தான் நீதிமன்று காலவரையின்றி தள்ளி வைத்தது.

இப்போது, மறுஆய்வு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்ட நிலையில், சரப்ஜித் சிங்கை காப்பாற்றும் கடைசிக் கட்ட முயற்சியில் அன்சார் புர்னி ஈடுபட்டுள்ளார்.

## டில்லியில் நேற்று மன்மோகனுடன் அமெ. பாதுகாப்பு ஆலோசகர் சந்திப்பு

பிரதமர் மன்மோகன் சிங்கை அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேம்ஸ் ஜோன்ஸ் டில்லியில் நேற்று சந்தித்துப் பேசினார். இருவரும் இருதரப்பு உறவுகள் குறித்து விவாதித்தனர் எனத் தெரிகிறது.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு டில்லி வந்த ஜோன்ஸ், பிரதமரின் அலுவலகத்தில் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார். தெற்காசியாவில் தற்போது நிலவும் சூழல் குறித்து இந்தியத் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஜோன்ஸ் ஆலோசனை நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

முன்னதாக ஜோன்ஸ் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனை நேற்றுமுன்தினம் சந்தித்து பேசினார் எனத் தகவல்கள் தெரிவித்தன.

# 'வணங்காமண்' நிவாரணப்பொருள்கள் இலங்கைத் தமிழருக்குச் சேரவேண்டும்

## சட்டசபையில் உறுப்பினர்கள் வலியுறுத்து

சென்னை, ஜூன் 27

ஈழத் தமிழருக்காக ஐரோப்பியத் தமிழர்களால் அனுப்பி வைக்கப்பட்ட வணங்காமண் கப்பலிலுள்ள நிவாரணப் பொருள்கள் இலங்கைத் தமிழர்களுக்கு உரிய முறையில் சென்றடைய வேண்டும் - என்று சட்டசபையில் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இலங்கைத் தமிழர்களுக்கான நிவாரணப் பொருள்களை ஐரோப்பாவில் இருந்து ஏற்றி வந்த வணங்காமண் கப்பலை இலங்கை திருப்பி அனுப்பியது தொடர்பாகபேரவையில் நேற்று முன்தினம் விவாதிக்கப்பட்டது.

ஜி.கே.மணி (பா.ம.க.) பேசுகையில் -

வணங்காமண் கப்பலில் இருந்து நிவாரணப் பொருள்களை இலங்கைக் கடற்படையினர் கடலில் தூக்கி வீசியுள்ளனர். இலங்கைத் தமிழர்கள், உணவு இல்லாமல் செத்துக் கொண்டிருக்கின்றனர். அந்த கப்பலில் உள்ள பொருள்கள் இலங்கைத் தமிழர்களுக்கு சென்றடைய வேண்டும் - என்றார்

ஞானசேகரன் (காங்.) பேசுகையில் -

இலங்கை அரசிடம் நிவாரணப் பொருள்கள் குறித்து பேசாதமையால்தான் இடைவெளி ஏற்பட்டு பிரச்சினை எழுந்தது. இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் செல்ல வேண்டும் - என்றார்.

நன்மாறன் (மார்க்சிஸ்ட்) பேசுகையில் -

இந்தப் பிரச்சினையில் அரசு உரிய நடவடிக்கை எடுத்து தடையை நீக்க வேண்டும் - என்றார்.

சிவபுண்ணியம் (கம்யூ.) பேசுகையில் -

இலங்கைத் தமிழர்களுக்கு அனுப்பப்பட்ட உதவிப் பொருள்கள் அவர்களுக்கு போய் சேர்கிறதா என்று மத்திய அரசு கண்காணிக்க வேண்டும் - என்றார்.

## நடிகர் விஜய் நீதிமன்றில் மனு



சென்னை, ஜூன் 27

சிவகாசி படத்தில் சட்டத்தரணிகளை இழிவுபடுத்தும் வகையில் காட்சிகள் இடம் பெற்றதைக் கண்டித்து தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் சட்டத்தரணிகள் தாக்கல் செய்துள்ள மனுக்களை ரத்து செய்யக்கோரி நடிகர் விஜய் சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இதுதொடர்பாக சட்டத்தரணிகள் சங்கத்துக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதி ரகுபதி உத்தரவிட்டார்.

# ப.சிதம்பரம் வெற்றியை எதிர்த்து நீதிமன்றில் அ.தி.மு.க. வழக்கு

சென்னை, ஜூன் 27

மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் சிவகங்கை தொகுதியில் வெற்றி பெற்றதை எதிர்த்து, அ.தி.மு.க. வேட்பாளர் ராஜகண்ணப்பன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அ.தி.மு.கவைச் சேர்ந்த ராஜகண்ணப்பன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சிவகங்கை மக்களவைத் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் நான் போட்டியிட்டேன். இதே தொகுதியில் காங்கிரஸ் சார்பில் ப.சிதம்பரம் போட்டியிட்டார். தேர்தலில் ப.சிதம்பரம் 3 ஆயிரத்து 553 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டது.

சிவகங்கைத் தொகுதி வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு நடந்துள்ளது. வாக்கு எண்ணிக்கையின்போது பல சுற்றுகளில் நான் முன்னிலையில் இருந்தேன். 7 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் நான் வெற்றி பெற்றேன் எனவும் அறிவிக்கப்பட்டது.

பின்னர், ப.சிதம்பரம் வெற்றி பெற்றார் என அறிவித்துவிட்டனர். இதை எதிர்த்து தேர்தல் கமிஷனிடம் முறைப்பாடு கொடுத்தேன். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு நடந்துள்ளது. எனவே, சிதம்பரம் வெற்றி பெற்றது செல்லாது என்று அறிவிக்க வேண்டும் - எனக் கூறியுள்ளது.

# டுபாயில் பிரபுதேவா - நயன்தாரா ஜோடி கடைக்குள் வைத்து ரசிகர்களால் முற்றுகை


சென்னை, ஜூன் 27

நடிகை நயன்தாரா, அவருடைய காதலர் எனக் கூறப்படும் பிரபுதேவாவுடன் டுபாயிலுள்ள கடை ஒன்றுக்கு ஜோடியாகச் சென்றபோது இருவரையும் ரசிகர்கள் முற்றுகையிட்டனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

விஜய் நடித்த 'வில்லு' படத்தில் அவருக்கு ஜோடியாக நயன்தாரா நடித்தார். இந்தப் படத்தை பிரபுதேவா இயக்கினார். அப்போது இருவருக்கும் இடையே காதல் ஏற்பட்டது.

நயன்தாராவுடன் உங்களுக்கு காதல் இருக்கிறதா என்று பிரபுதேவாவிடம் கேட்டபோது, அது என் தனிப்பட்ட விடயம்என்று பதிலளித்தார்.

ஆனால் இந்தக் காதலை நயன்தாரா மூடி மறைக்கவில்லை. நான் திருமணம் செய்து கொள்ளும்போது அனைவருக்கும் சொல்லிவிட்டுத்தான் செய்வேன் என்று கூறினார். பிரபுதேவாவை நயன் திருமணம் செய்துகொள்வதில் உறுதியாக இருக்கிறார். அவருடைய பெயரை கையில் பச்சை குத்தியிருக்கிறார்.



நயன்தாரா 'வெளிர்' பட படப்பிடிப்புக்கு செல்லும்போதெல்லாம், பிரபுதேவாவும் அங்கே சென்று வருகிறார். இருவரும் ஒரே ஹோட்டலில், ஒரே அறையில் ஜோடியாகதங்குகிறனர்.

இந்த நிலையில், டுபாயில் உள்ள தனது அண்ணனிடம், பிரபுதேவாவை அறிமுகம் செய்து வைக்க நயன்தாரா விரும்பினார். அதற்காக இருவரும் ஜோடியாக டுபாய் பயணமானார்கள்.

நயன்தாராவும், பிரபுதேவாவும் டுபாயில் வாசனைத் திரவியங்கள் வாங்குவதற்காக 'இபன் பதுதா' என்ற கடைக்குச் சென்றார்கள். அந்தக் கடையில் தமிழர்கள் அதிகமாக இருந்தார்கள்.

நயன்தாராவையும், பிரபுதேவாவையும் ஜோடியாக பார்த்ததும் அவர்களை முற்றுகையிட்டார்கள். இரண்டு பேரிடமும் 'ஆட்டோகிராப்' கேட்டனர். 2 பேரும் தனித்தனியாக ரசிகர்களுடன் நின்று போட்டோ எடுத்துக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றிக் காய்ச்சல் குறித்த ஆலோசனை வழங்க போதனா வைத்திய சாலையில் விசேட பிரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 27

பன்றிக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் காணப்பட்டால் யாழ். போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவில் விசேடமாக ஒதுக்கப்பட்ட அறையில் வைத்திய ஆலோசனை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பன்றிக் காய்ச்சல் ஒரு வைரஸ் கிருமியால் ஏற்படுகின்றது. தற்போது இந்த நோய் பல நாடுகளில் பரவி வருகின்றது. கடந்த இரண்டு வாரங்களாக இந்த நோய் இலங்கையின் தென்பகுதியில் 5 பேருக்கு பரவி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது சில சமயம் மரணத்தை ஏற்படுத்தக் கூடிய கடுமையான நோய் ஆகும்.

இதனால் நாமும் இது பற்றி கவனமாக இருக்க வேண்டும். இந்த நோய் உள்ள ஒருவர் இருமும்போதும் தும்மும்போதும் வெளிவரும் துணிக்கை காற்றில் கலந்து மற்றவர்களுக்கு பரவுகிறது.

உங்களுக்கு, காய்ச்சல், இருமல், தலையிடி, கைகால் நோ போன்ற குணங்குறிகள் இருப்பதுடன் கடந்த இரண்டு வாரங்களுக்குள் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்களுடன் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பின் நீங்கள் இது பற்றி டாக்டரிடம் அறியத்தரவேண்டும்.

இவ்வாறு அறியத்தருவதன்மூலம் நீங்கள் உங்களையும் மற்றும் உங்கள் உறவினர்களையும் மற்றையோரையும் பாதுகாக்க முடியும்.

மேற்படி நோயை ஆரம்பத்தில் கண்டறியும் பட்சத்தில் அதற்கான மருந்துகளை உட்கொள்வதன் மூலம் நோயை விரைவில் குணப்படுத்த முடியும். ஆகவே இது பற்றி உங்களுக்கு சந்தேகம் இருப்பின் உடனடியாக வைத்தியருக்கு அறியத்தருவதன் மூலம் உங்களையும் மற்றவர்களையும் இந்த நோயில் இருந்து பாதுகாப்பதற்கு உதவும் - என்று உள்ளது. (1)

# பயணிகள் கப்பல் சேவை நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூன் 27

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச்செயலகத்தில் கப்பல் பிரயாணத்திற்கான பதிவுகளை மேற்கொண்டு 27ஆம், 28 ஆம் திகதிகளுக்கான அனுமதிச்சீட்டினை பெற்றுக் கொண்டவர்களும் அவசர தேவையின் நிமித்தம் செல்ல இருப்பவர்களும் நாளை காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (1)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 27

கரவை தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய வரலாற்று நூல் வெளியீடு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூலின் மதிப்புரையை சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் வழங்குவார். ஆய்வுரையை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியை சைவப்புலவர் நமசிவாயம் கல்யாணி நிகழ்த்துவார். (201)

# இடம்பெயர்ந்தோருக்கு கலைஞர்கள் உதவி



யாழ்ப்பாணம், ஜூன் 27

வன்னியில் இருந்து ஏதிலிகளாக இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு உதவுவதற்கென யாழ்ப்பாணத்தின் இசைக் கலைஞர்களால் (நாதஸ்வரம், தவில் வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்க, நடன) சேகரிக்கப்பட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா யாழ். அரச அதிபரிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

வவுனியா அரச அதிபர் ஊடாக நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளவர்களுக்கு உதவவே யாழ். அரச அதிபரிடம் இந்த நிதி கையளிக்கப்பட்டுள்ளது.

நிதிகையளிக்கப்படுவதை படத்தில் காணலாம். (1)

# வீட்டில் தனித்திருந்த இளம்பெண் சடலமாக நேற்று மீட்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 27

பருத்தித்துறை, கந்த உடையார் ஒழுங்கைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் வாழ்ந்துவந்த இளம் பெண் ஒருவர் கழுத்து நெரித்துக்கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

செல்வேந்திரம் அபிராமி (வயது33) என்பவரே மரணமானவர் ஆவார்.

செஞ்சிலுவைத் தொண்டராகப் பணிபுரியும் பிரஸ்தாப பெண் பெற்றோரை இழந்து அந்த வீட்டில் தனித்து வாழ்ந் தார் என்றும் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் நேற்று அவர் சடலமாக மீட்கப்பட்டார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார் என பொலீஸார் தெரிவித்தனர். (1-78)

# நாடாளுமன்றில் எம்.பிக்கள் இல்லை சபை ஒத்திவைப்பு; பிரேரணை ஸ்தம்பிதம்

கொழும்பு, ஜூன் 27

எம்.பிக்களின் எண்ணிக்கை குறைவடைந்ததைத் தொடர்ந்து நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதால் தொழில் அமைச்சின் குறைநிரப்பு பிரேரணை ஒன்றை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலை நேற்று நாடாளுமன்றில் ஏற்பட்டது.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு கைத்தொழில் அமைச்சர் குமார் வெல்கம 20 கோடி ரூபாவுக்கான குறைநிரப்பு பிரேரணை ஒன்றை சபையில் சமர்ப்பித்து அதன் மீதான விவாதத்தை ஆரம்பித்தார்.

அவரைத் தொடர்ந்து ஐ.தே.கட்சி எம்.பியான தயாசிறி ஜயசேகர மற்றும் ஜே.வி.பியின் எம்.பியான பிரேமசிறி மானகே ஆகியோர் உரையாற்றினர்.

இருவரும் உரையாற்றி முடிந்ததும் அமைச்சர் மஹிந்த ரத்னதிலக உரையாற்ற எழுந்தார். அப்போது எம்.பிக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் எண்ணிக்கையை உயர்த்துவதற்காக பிரேமசிறிமாணகே 'கோரம்' கோரினார். தொடர்ச்சியாக 5 நிமிடங்களுக்கு கோரம் மணி ஒலித்தது. இருப்பினும் எம்.பிக்கள் எவரும் சபைக்குள் வரவில்லை.

சபையைத் தொடர்ந்து நடத்திச் செல்வதற்கு ஆகக் குறைந்தது 21 பேர் சபையில் இருக்கவேண்டிய நிலையில் எட்டுப் பேர் மாத்திரமே சபையில் இருந்தனர்.

ஆளுந்தரப்பில் 4 பேரும், எதிர்க்கட்சிகளில் 4 பேரும் இதில் அடங்குகின்றனர். இதனால் நாடாளுமன்றத்தை ஒத்திப் போடும் நிலை ஏற்பட்டது.

அப்போது சபா பீடத்தில் அமர்ந்திருந்த குழுக்களின் பிரதித் தலைவர் இராமலிங்கம் சந்திரசேகரன் நாடாளுமன்றத்தை அடுத்த மாதம் 7 ஆம் திகதிவரை ஒத்திப் போட்டார்.

இதனால் அந்தக் குறைநிரப்பு பிரேரணையை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போனது. (அ-சி)

# இலங்கை விவகாரத்தை விவாதத்துக்கு எடுக்காததால் தமிழக சட்டசபையில் 2 கட்சிகள் வெளிநடப்பு!

சென்னை, ஜூன் 27

இலங்கையில் சர்வதேச நெறிமுறைகளை மீறி பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர் எனத் தெரிவித்து, அது குறித்து தமிழக சட்டசபையில் பேசுவதற்கு அனுமதி கேட்ட அ.தி.மு.க., ம.தி.மு.க உறுப்பினர்கள், அந்த அனு மதி வழங்கப்படாததை ஆட்சேபித்து வெளி நடப்புச் செய்தனர்.

தமிழக சட்டமன்றத்தில் நேற்றுக் கேள்வி நேரம் முடிந்ததும் அ.தி.மு.க. உறுப்பினர் ஜெயக்குமார் எழுந்து, இலங்கையில் சர்வதேச போர் நெறிமுறைகளை மீறி 50 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டமை குறித்து பிரச்சினை எழுப்ப முயன்றார். அதற்கு சபாநாயகர் ஆவுடையப்பன், ''இந்தப் பிரச்சினையை நேற்றுத்தான் (நேற்று முன்தினம்) என்னிடம் கொடுத்தீர்கள். அது என் ஆய்வில் உள்ளது'' என்றுகூறி அவருக்குப் பேசுவதற்கு அனுமதி மறுத்தார்.

இந்தப் பிரச்சினையை இன்றே (அதாவது நேற்று) விவாதத்துக்கு எடுக்கவேண்டும் என்று அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனை வரும் அவையில் எழுந்து நின்று வலியு றுத்தினார்கள். ஆனால் சபாநாயகர் அதற்கு அனுமதி மறுத்துவிட்டார்.

இதனைக் கண்டித்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் சட்டசபையில் இருந்து வெளிநடப்புச் செய்தார்கள். அவர்களைத் தொடர்ந்து ம.தி.மு.க. உறுப்பினர்களும் வெளிநடப்பில் ஈடுபட்டனர். ஆனால் அ.தி.மு.க. உறுப்பினர் எஸ்.வி.சேகர் மட்டும் இந்த வெளிந டப்பில் கலந்துகொள்ளவில்லை.



யாழ்.ஆஸ்பத்திரிவீதியில் உள்ள கடைஒன்றில் நேற்று மாலை திடீர் தீவிபத்து இடம்பெற்றது. மின் ஒழுக்கு காரணமாக இந்த விபத்து சம்பவித் துள்ளது. யாழ்.மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். சேதமடைந்த கடையை படத்தில் காணலாம்.

# 'பொப்' இசை சக்கர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு மணி நேரத்தின் பின்னர் லொஸ் ஏஞ்சல்ஸில் யு.சி.எல்.ஏ. வைத்தியசாலையில் அவர் இறந்துவிட்டார் என அறிவிக்கப்பட்டது.

ஜக்சனின் சகோதரர் ஜெர்மைன், மைக்கல் மாரடைப்பால் காலமானார் எனத் தெரிவித்தார்.வைத்தியர்கள் இரு மணி நேரமாக ஜக் சனின் உயிரை காப்பாற்ற முனைந்தார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மைக்கல் ஜக்சன் ஜூலை மாத ஆரம்பத்தில் லண்டனில் மாபெரும் இசை நிகழ்ச்சியொன்றை நடத்துவதற்கான ஒத்திகைகளில் ஈடுபட்டு வந்தவேளை, இந்த மரணம் நிகழ்ந்துள்ளது.

சர்ச்சைகள், நோய் என்பனவற்றின் பிடியில் சிக்கியிருந்த ஜக்சன் மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் இந்த இசை நிகழ்ச்சியை நடத்தவிருந்தார்.

ஜக்சன் தீவிரமான ஒத்திகையில் ஈடுபட்டிருந்தார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர். அவர் கடும் சவாலை இதன் போது எதிர்கொண்டார்.

அவர் பயன்படுத்தி வந்த மருந்துகள் அவருக்குத் தடையாக அமைந்தன. ஒத்திகையின்போது விழுந்ததில் எலும்பு முறிந்தது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஜக்சனின் மரணத்திற்கான காரணங்களை உறுதி செய்வதற்கு இரண்டு வார காலம் எடுக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதன் பிறகே அவரது உடலில் மருந்துகள், மது அல்லது வேறு ஏதாவது காணப்பட்டதா என்பதை உறுதி செய்ய முடியுமென அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, மைக்கல் ஜக்சனின் திடீர் மரணம் உலகத் தலைவர்கள் உட்பட அவரது கோடிக்கணக்கான ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.

வெனிசுலா ஜனாதிபதி கியூசோ சாவெஸ் ஜக்சனின் மரணத்தை கவலைக்குரிய - வருந்ததக்க விடயம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சர்வதேச ஊடகங்கள் இவரின் மரணத்திற்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

மைக்கல் ஜக்சனை பலமுறை சந்தித்துள்ள தென்கொரிய ஜனாதிபதி கிம்-டோயுங் உலகின் கதாநாயகனை இழந்து விட்டோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மைக்கல் ஜக்சன் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டதை அறிந்ததும், அவரது ரசிகர்கள் பதற்றத்துடனும், கவலையுடனும் வைத்தியசாலையை சூழத் தொடங்கி விட்டனர்.

அவரது பாடல்களைப் பாடியபடி - நடனமாடியபடி அவர்கள் காத்திருந்தனர்.

பெருமளவு ரசிகர்கள் அவரது வீட்டிற்கு வெளியே மெழுகுதிரிகளை ஏற்றியபடி காத்திருந்தனர்.

என்னால் இந்த துயர செய்தி குறித்து அழாமல் இருக்க முடியவில்லை என மற்றுமொரு பிரபல பொப் பாடகி மடோனா தெரிவித்துள்ளார். (சி)

# லயன்ஸ் கழக நிகழ்வுகள்

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் ஐந்தாவது ஆண்டு பூர்த்தி விழாவும் புதிய நிர் வாகிகள் பதவியேற்பும் இன்று மு.ப. 10 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி மண்டபத்தில் நடைபெறும்.

கழகத் தலைவர் லயன் செ.சரவணமுத்து தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி.மாவட்ட உப ஆளுநர் லயன் பிரியந்த பெர்னாண்டா லயன் சீமாட்டி ஆஷா ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக லயன் எஸ். சிவராஜேஸ்வரன், லயன் எஸ்.எஸ். தங்கராசா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக பிராந்திய தலைவர் லயன் வ.ஸ்ரீ பிரகாஸ், பிரதேச சபை செயலாளர் டே.சிவராஜலிங்கம், கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. அதிபர் வே.நடராசா ஆகியோரும் கலந்து கொள்வர்.

கழகத்தின் நலநோன்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்ட சபை உப ஆநனரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

* * *

கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் 2009/2010 ஆம் ஆண்டுக்கான பதவியேற்பு வைபவமும்கோண்டாவில் லயன்ஸ் கழக அங்குரார்ப்பண நிகழ்வும் நாளை மு.ப. 10 மணிக்கு இணுவில் காரைக்கால் சிவன் கோயில் மணி மண்டபத்தில் லயன் என்.ரி.எஸ் சுபநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட உதவி ஆளுநர் லயன் பிரியந்த பெர்னாண்டோவும் கௌரவ விருந்தினர்களாக மாவட்ட உப செயலாளர் லயன் எஸ். சிவராமகிருஸ்ணனும் மாவட்ட உப பொருளாளர் லயன் எஸ். தங்கராஜாவும் சிறப்பு விருந்தினராக பிராந்திய தலைவர் லயன் வி.சிவபிரகாஸும் கலந்து கொள்ளவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணியின் கடத்தலுடன் அரசுக்குத் தொடர்பில்லை

## அமைச்சர் நிமால் நாடாளுமன்றில் தெரிவிப்பு

'இன்டர் நியூஸ்' இணையத்தளத்தின் ஊடகவியலாளர் கிருஷ்ணி இஃபாம் கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்துடன் அரசிற்கு எந்தத் தொடர்பும் இல்லை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் வத்தளையில் வைத்து கடத்தப்பட்டு, விசாரணைக்கு உட்படுத் தப்பட்டதுடன், கடத்தியவர்கள் அவரைக் கண்டியில் விட்டுச் சென்றுள்ளனர். இது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சபையில் வெளியிட்ட கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (சி)

## 'வணங்காமண்'....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிவாரணப்பொருள்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப் படும் என்றுஅவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதியின் செயலாளர், சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய தொலைபேசி செவ்வியின் போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை மீளக்குடியமர்த்த இந்தியாவும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மக்களது ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தும் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் குறித்து இந்திய அரசாங்கத்துக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது- என்றும் தெரிவித்தார்.

## தமிழர் பிரதேசங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருப்பதால் உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாதிப்படைந்து வருவதனால் அனைத்து முகாம்களையும் மூடி விட்டுஅனை வரையும் அவரவர் சொந்த இடங்களுக்கு திரும்ப அனுமதிக்க வேண்டும்.

தமிழர் பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றும் பணியை இலங்கை அரசு உடனே ஆரம்பிக்க வேண்டும். அந்தப் பணியில் இந்தியா ஈடுபட்டு உதவி செய்யும்.

இலங்கையின் மறுசீரமைப்புக்கு அந்த நாடு எடுக்கவுள்ள அனைத்து நடவடிக்கைகளிலும் இந்தியா துணை நிற்கும். அதே வேளையில் சிங்களவர்களுக்கு இணையாக தமிழர்களுக்கும் அனைத்து உரிமைகளும் கல்வி, வேலைவாய்ப்பில் சம வாய்ப்பும் தரப்பட வேண்டும் என இந்தியத் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழீழம் வேண்டும் என்று ஆயுதம் எடுத்துப் போராடிய விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர்கள் கொல்லப் பட்டு அந்த இயக்கம் இப்போது செயற்பட முடியாத நிலைக்கு முடக்கப்பட்டிருக் கலாம், ஆனால் தமிழர்கள் தனி நாடு கேட்பதற்கான காரணங்களை நீக்காத வரை அத்தகைய வெற்றி எதுவும் இலங்கைக்கு நிரந்தர நிம்மதியை கொடுத்து விடாது. (அ)

## வடபகுதி மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு நிலைப்பாடுகள் காரணமாக ஜனாதிபதியினால், வட பகுதி மக்களுக்கு வழங்கப் போகும் அரசியல் தீர்வை தெரிவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

13ஆவது அரசியல் சாசனத் திருத்தத்திற்கு அப்பால் சென்று அரசியல் தீர்வை வழங்க போவதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எனினும் அரசாங் கத்தில் இணைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசாங்கத்தில் இணைந்து கொண்ட குழுவினர் பல்வேறு விதமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இது குறித்து ஜனாதிபதி நேரடியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இன்று வடக்கில் இடம் பெயர்ந்தவர்களை எடுத்துக் கொண்டால் லட்சக் கணக்கானவர்களுக்கு ஏற்பட்டுள்ள கதி எமக்கு தெரிகின்றது. இவர்கள் தொடர்பில் அரசாங்கம் அதிகசிரத்தை எடுத்திருக்கக் கூடும். எனினும் இந்த இடம் பெயர்ந்த மக்கள் உலகில் சில இடங்களில் உள்ளவர்களைப் போன்று பிச்சைக்காரர்கள் அல்லர். இந்த இடம்பெயர்ந் தவர்களில் பெரும்பான்மையானவர்கள் சொத்து, சுகங்களைக் கொண்ட மக்கள். இதனை நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் பயங்கரவாதிகள்இருப்பார்களேயானால் உடனடியாக தேடிப் பார்த்து தண்டனையளியுங்கள். அவர்களுக்கு வழங்கக் கூடிய அதிக பட்ச தண்டனையை வழங்குங்கள்- என்றும்அவர் சொன்னார். (அ)

## தமிழ்க்கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுதாபப் பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் தான் பத்மநாதன் எம்.பியாகி இந்த நாடாளுமன்றுக்கு வந்தார். அவர் ஜனநாய கத்தை மதித்து நின்றவர்.

அவர் நாடாளுமன்றத்தில் முழு நம்பிக்கை வைத்திருந்தார். நாடாளுமன்றத்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்று நினைத்திருந்த ஒரு காலகட்டத் தில் தான் அவர் நாடாளுமன்றம் நுழைந்தார். ஆனால் தமிழ் மக்களின் பிரச்சி னைகளை நாடா ளுமன்றத்தின் ஊடாகத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையில் அவர் செயற் பட்டார். மக்களுக்குத் தன்னால் முடிந்த சேவையைச் செய்யும் நோக்கில் அவர் பல கூட் டங்களில் கலந்துகொண்டிருக்கின்றார்.

நாடாளுமன்றத்தினூடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்றுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாடாளுமன்றம் வந்திருக் கின்றனர். அவர்கள் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகச் செயற்படும் உரிமை வழங்கப்படல் வேண்டும்.

அப்படியானதொரு நிலைமை ஏற்படாது விட்டால் தமிழ் மக்கள் இந்த நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கை இழந்து விடுவர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பத்மநாதனின் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த அனு தாபத்தையும் எனது குடும்பத்தின் அனு தாபத்தையும் மற்றும் எனது கட்சியின் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ள அவர், ''சர்வதேச நாணய நிதியக் கடனுதவி தொடர்பான பிரிட்டினின் சிந்தனையில் மாற்றம் ஏற்படவில்லை. சர்வதேச நாணய நிதியக் கடனு தவி இலங்கை அரசுக்கு இன்னும் கிடைக் கவில்லை'' என்று தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் இரு பணியாளர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாகவேறு எந்த நாட்டையும் விட பிரிட்டன்கடுமையானநிலைப் பாட்டை எடுத்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தேர்தலுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மறைந்த எம்.பி. பத்மநாதனுக்கான அனுதாபப் பிரேரணை உரையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

2004ஆம் ஆண்டு 22 எம்.பிக்களுடன் நாம் நாடாளுமன்றத்திற்கு வந்தோம். இப்போது அதிக எம்.பிக்களை இழந்த கட்சியாகவுள்ளோம்.

2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டபோது பத்மநாதனுக்கு தொலைபேசி வழியாகப் பல மிரட்டல்கள் வந்தன. அவர் அவற்றையெல்லாம் உதறித்தள்ளித் துணிவுடன் அரசியலில் நுழைந்தார்.

நாம் இப்போது பத்மநாதனை இழந்தாலும் கூட அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்வோம். தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கவேண்டும் என்பதே அவரது கனவாக இருந்தது.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாத் தேர்தலில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து போட்டியிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சியெடுத்தது. அது வெற்றியளிக்கவில்லை. இதற்குப் பின்னராவது தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் - என்றார்.

## கோத்தபாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடுவதுடன், இராணுவத் தினரின் வீட்டுத்திட்டத்திற்காக 'நமக்காக நாம்' என்ற நிதியத்தையும் ஆரம்பித்துவைக் கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில்அந்தப்பொறுப்பைஅவர்ஏற்றுக்கொள்வார் என்று அரச வட்டாரங் கள் தெரிவித்தன.

வன்னி மீதான இராணுவ நடவடிக்கை மூன்று வருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப் பட்டபோது அதில் பங்கேற்ற 57 ஆவது படையணியின் கட்டளை அதிகாரியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மடுத்தேவாலயம், கொக்காவில் நகரம், துணுக்காய், மல்லாவி, கிளிநொச்சி ஆகிய பகுதிகளை மீட்பதில் முன்னின்று பெரும் பங்காற்றினார் என்று அரச வட் டாரங்கள்தெரிவித்தன.

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 2224333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்'
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

வாங்கி விட்டீர்களா?
தரம் 1,2,3,4,5 (May)
அம்மா
அன்னை
தாய்
அறிவு
தேடல்
கற்கமி வெளியீடு
நாவலர் வீதி, யாழ்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat (Sri Lanka)
Foundation, Intermediate, Final
Registration is now open for any body having 06 passes at GCE O/L
Medium:- தமிழ் & English
விரிவுரைகள் ஆரம்பம்:- 27.06.2009
Saturday 10 a.m.
★ A/L 2009 பரீட்சை எடுக்கும் மாணவர்கள் பதிவினை தற்போது மேற்கொண்டு பரீட்சை முடிந்தவுடன் தொடங்கும் விசேட பிரிவில் இணைந்து கொள்ளலாம்.
★ பதிவுகள் இன்றுமுதல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்வதன் மூலம் சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.
Furthur Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.

DMI
ஸ்ரான்லி வீதி, யாழ்.
அனைவருக்கும் நன்றி"
2008.02.09 தொடக்கம் 2009.06.20 வரை
நாம் நாவலர் வீதியில்
இயங்க ஒத்துழைத்தவர்களுக்கு...
ஜூன் - 27







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.